விலை ரூபா:

பக்கங்கள்:- பத்து **Registered as a News paper in Sri Lanka**

# வலம்புரி
VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 07 புதன்கிழமை (19.02.2003) தொலைபேசி- 2223378 ஒலி 62

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## மக்களை அச்சுறுத்தும் வகையில்
# முல்லைத்தீவுக் கடலில்
# கடற்படை தீவிர ரோந்து!

### மீனவர்கள் தொழிலிழப்பு

(முல்லைத்தீவு)

**முல்லைத் தீவுக் கடற் பிரதேசத்தில் இலங்கை கடற்படையினர் கடந்த சில தினங்களாக தீவிர ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதையடுத்து கடற் தொழிலாளர்கள் அச்சம் காரணமாக கடல் தொழிலுக்குச் செல்லாமல் பாதுகாப்பான இடங்களை நாடிச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ள கடற்படையினர் நேற்றும், நேற்று முன்தினமும் காலை முதல் மாலைவரை முழுமையான ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக பீதியடைந்த மக்கள் தமது தொழிலைக் கைவிட்டுள்ளதுடன் இது தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடற்படையினரின் ரோந்து நடவடிக்கை தீவிரப்படுத்தப் பட்டிருப்பதனால் கடற்கரை வாழ் மக்கள் மத்தியிலும் பீதி ஏற்பட்டுள்ளதை அடுத்து தமது வாழ்விடங்களை விட்டு நேற்று பாதுகாப்பான இடங்களை நோக்கி நகரத் தொடங்கியுள்ளதாகவும் முல்லைத் தீவுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள கடற்படையினரின் அதிவேக டோராப் படகுகளின்

(10ம்பக்கம் பார்க்க)

### வெல்லாவெளிப் பிரதேச சபைத்தலைவரின்
## வீட்டை இலக்கு வைத்து
## கைக்குண்டுத் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வெல்லாவெளிப் பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.ஆர்.எல்.எவ் .இயக்கத்தைச் சேர்ந்தவருமான இரா.துரைரட்ணத்தின் இல்லம்மீது நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொளளபபட்டது.

மட்டக்களப்பு நகரிலுள்ள இவரது இல்லம் மீது வீசப்பட்ட இந்தக் கைக்குண்டு,வீட்டு மதிலில் வீழ்ந்து வெடித்ததால் குறிப்பிடத்தக்க சேதங்கள் எதுவும் இல்லை.

இந்தச் சம்பவத்தின் போது வீட்டில் மனைவியும், மகளும் இருந்ததாகவும் தான் அருகில் உள்ள நண்பர் வீட்டில் உரையாடிக கொண்டிருந்ததாகவும் இது பற்றி இரா.துரைரட்ணம் தெரிவித்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த வாலிபர் ஒருவரே இந்த க்ரனைட் தாக்குதலை மேற்கொண்டதாகவும் அவர் இது பற்றி மேலும் தெரிவித்துள்ளார்.

(உ)

## புலி உறுப்பினர்கள் இருவர் மன்னார் நீதிமன்றில் ஆஜர்

(மன்னார்)

மன்னாரில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்கள் இருவரையும் எதிர்வரும் இரண்டாம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டது.

புலிகள் இயக்கத்தில் சுய விருப்பின் பேரில் இணையச் சென்ற சிறுவர்களை அழைத்துச் சென்றமைக்காகவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத்

(10ம்பக்கம் பார்க்க)

## சர்வதேசப் பிரதிநிதிகள் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு!

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, யூ.என்.டி.பி ஆகியவற்றின் பிரதிநிதிகள் நேற்று கிளிநொச்சியில சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

நேற்றுக் காலை இலங்கை விமானப்படைக்கு சொந்தமான உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி பொது மைதானத்தில் வந்திறங்கிய அதிகாரிகள் குழுவினரை விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் புலித்தேவன், தமிழீழ அரசியல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் தங்கன், சிறான் செயலகப் பணிப்பாளர் செல்வின் ஆகியோர் வரவேற்றனர்.

இதனைத் தொடர்ந்து தமிழீழ அரசியல்துறை நடுவப் பணியகத்தில

(10ம் பக்கம் பார்க்க)

### வீடுகளுக்கு கல்லெறிந்த சிப்பாய்கள் நீதிமன்றில்

(கொழும்பு)

கொத்தலாவலை இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் கல்லூரிக்கு பக்கத்தில் உள்ள பெண்கள் வசிக்கும் வீடுகளுக்கு கல்லெறிந்ததையடுத்து அவர்கள் கைது செய்யப்பட்டு கல்கிசை நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

கல்கிசை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் சந்தேக நபர்கள் ஆஜர் படுத்தப்பட்டபோது அவர்களை பிணையில் செல்வதற்கு நீதிவான் அனுமதித்துள்ளார். (வ)

## சிங்கள- முஸ்லிம் மக்களை புலிகள் திட்டமிட்டு விரட்டினர்!

### பாராளுமன்ற உறுப்பினர் நிமால் கூச்சல்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் வாழும் மக்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதன் மூலம்,தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படும் வகையில் பாதுகாப்பு அமைச்சர் செயற்பட்டுள்ளதால் அவர் மீது பாராளுமன்றம் தொடர்ந்தும் நம்பிக்கை கொள்ளமுடியாது.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாத்தில் பேசிய பொது ஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் நிமால் ஸ்ரீபாலடீசில்வா தெரிவித்துள்ளார்.

பிரேரணையை ஆரம்பித்து வைத்துப் பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

(10ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் சரணடைய நெப்போலியனுக்கு அனுமதி

(கொழும்பு)

நாரந்தனை படுகொலைச் சம்பவம் தொடர்பில் ஈ.பி.டி.பி உறுப்பினர் நெப்போலியன்,தாம் கொழும்பு நீதிமன்றம் ஒன்றில் சரணடைவதற்கு அனுமதி கோரி கொழும்பு உச்ச நீதிமன்றில் மனுஒன்றை தாக்கல் செய்திருந்தார்.இதற்கான அனுமதி உச்ச நீதிமன்றத்தினால் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.நதிமன்றில் சரணடைந்தால்

(10ம்பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் தமிழ்ச்செல்வனைச் சந்திப்பர்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை தமிழ்க கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் இம் மாதம் 23ம் திகதி கிளிநொச்சியில் சந்திக்கவுள்ளனர்.

இச்சநதிப்பிற்கான அழைப்புகளை விடுதலைப் புலிகள்,தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களுடனான சந்திப்பின் போது சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் புரிந்துணர்வு உடன் படிக்கை அமுல்படுத்தல் தொடர்பாகவும் அண்மைக் கால அரசியல் நடவடிக்கை தொடர்பாகவும் ஆராயப்படும்என தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களின் இச் சந்திப்பு மூன்றாவது சந்திப்பு என்பது குறிப்பிடத்தக்கது.(வ)

## யாழ்.குடாநாடு எங்கும் இன்று கறுப்புப் பட்டிப் போராட்டம்!

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள சமாதான முன்னெடுப்புக்களைக் குழப்பும் ஆயுதப் படையினரின் யுத்த நிறுத்த மீறல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, இன்று யாழ்.குடாநாட்டில் மாபெரும் கறுப்புப் பட்டிப் போராட்டம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் இப் போராட்டத்திற்கான அழைப்பை விடுத்துள்ளது.

குடாநாட்டு மக்களின் இயல்பு நிலையை பாதிக்காத வகையில் இடம்பெறவுள்ள இப் போராட்டத்திற்கு குடாநாட்டு மக்கள் அனைவரும் பூரண ஆதரவை வழங்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள், அரச அலுவலகங்களில் பணிபுரிவோர் மற்றும் தனியார் நிறுவனங்களில் கடமைபுரிவோர் அனைவரும் கறுப்புப்பட்டி அணிந்து செல்லுமாறும், வாகனங்களில் கறுப்புக் கொடியை

(10ம்பக்கம் பார்க்க)


### பாதுகாப்பு அமைச்சருக்கு எதிரான
## நம்பிக்கையில்லாப் பிரேரணை
## 42 வாக்குகளால் தோல்வி கண்டது

(கொழும்பு)


பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை 42 அதிகப்படியான வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது. இத் தீர்மானத்திற்கு ஆதரவாக 84 வாக்குகளும் எதிராக 126வாக்குகளும் கிடைத்துள்ளன.

பாதுகாப்பு அமைச்சர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு பொது ஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும் ஆதரவாக வாக்களித்துள்ள அதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி, புளொட், முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன அரசுடன் சேர்ந்து தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் அசம்பாவிதங்களை காரணங் காட்டி பொது ஜன ஐக்கிய முன்னணியால் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. (வ)





# CRICKET WORLD CUP 2003




## உலகக் கிண்ணக் கிரிக்கெற் - 2003

### மேற்கிந்தியத் தீவு எதிர் பங்களாதேஷ்

### மேற்கிந்தியத் தீவு

50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 244 ஓட்டங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| கிட்ஸ் | c சகாரியர் | b மக்மட் | 18 | (39) |
| கைல் | c ஹோசன் | b இஸ்லாம் | 0 | (5) |
| லாரா | c சகாரியர் | b ஹக் | 46 | (76) |
| சந்ரபோல் | lbw | b ஹக் | 29 | (53) |
| கூப்பர் | c&b | b கபாலி | 45 | (58) |
| சர்வான் | c&b | b இஸ்லாம் | 13 | (28) |
| பெவல் | c குசைன் | b இஸ்லாம் | 50 | (31) |
| ஜேக்கப்ஸ் | Not out | | 6 | (8) |
| டிரக்ஸ் | Run out | | 0 | (3) |
| டிலொன் | c அஸ்ரபுல் | b இஸ்லாம் | 10 | (6) |
| கொலிமோர் | Not out | | 0 | (0) |

உதிரிகள் –27

**பந்து வீச்சு- பங்களாதேஷ்**

| | | | |
|---|---|---|---|
| இஸ்லாம் | 10 | 62 | 3 |
| யுபைர் | 08 | 46 | 0 |
| மக்மட் | 10 | 48 | 2 |
| ஹக் | 10 | 34 | 2 |
| ரபிக் | 10 | 44 | 0 |
| கபாலி | 2 | 3 | 1 |

### பங்களாதேஷ்

8.1 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட் இழப்பிற்கு 32 ஓட்டங்களைப் பெற்ற வேளை, மழைகாரணமாக போட்டி இடைநிறுத்தப்பட்டு இரண்டு அணிகளுக்கும் தலா இரண்டு புள்ளிகள் வழங்கப்பட்டன.

| | | | | |
|---|---|---|---|---|
| சகாரியர் | c கைல் | b டிரெக்ஸ் | 5 | (14) |
| ஹக் | | b டிலொன் | 12 | (24) |
| அஸ்ரபுல் | Not out | | 8 | (4) |
| ஹெசைன் | Not out | | 2 | (7) |

உதிரிகள் –05

**பந்து வீச்சு - மேற்கிந்தியத் தீவு**

| | | | |
|---|---|---|---|
| டிலோன் | 4.1 | 13 | 1 |
| டிரெக்ஸ் | 4 | 17 | 1 |

CRICKET WORLD CUP 2003

# இந்திய கிரிக்கெற் வீரர்களின் வீடுகள் மீது கல்வீச்சு

## பொலிஸ் பாதுகாப்பு உடன் அமுல்

உலகக் கிண்ணக் கிரிக்கெற் தொடரில் ரசிகர்கள் பலரினதும் எதிர்பார்ப்புக்களை தவிடு பொடியாக்கி சர்ச்சையைக் கிளப்பியுள்ள இந்தியஅணியின் ஆட்ட வீதம் டெஸ்ட் கிரிக்கெற் அந்தஸ்துப் பெறாத நெதர்லாந்து அணியுடன் ஒருவாறு வெற்றி பெற்ற இந்திய அணி அவுஸ்திரேலிய அணியுடனான ஆட்டத்தில் படு தோல்வி அடைந்தது.

உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களைக் கொண்ட இந்திய அணி விவேகமாக ஆடி வெற்றிகளைக் குவிக்குமென இந்திய ரசிகர்களால் நம்பப்பட்ட போதிலும், இந்திய அணி படு தோல்வியடைந்தமை இந்திய ரசிகர்களை ஆத்திரம் கொள்ள வைத்தது.

இதன் எதிரொலியாக இந்திய நகரங்கள் பலவற்றில் அணித் தலைவர் கங்குலியின் உருவப் படங்கள் எரிக்கப்பட்ட துடன் கிரிக்கெற் வீரர்களின் வீடுகள் சிலவற்றின் மீதும் கல்வீச்சுத் தாக்குதல் இடம் பெற்றது.

இதேவேளை இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறுவதை யிட்டு கங்குலி கருத்துத் தெரிவிக்கையில், நாங்கள் அனைத்துப் பந்தயங்களையும் இன்னமும் இழந்து விடவில்லை. என்னும் 4 பந்தயங்களில் விளையாட வேண்டியுள்ளது இதனால் சுப்பர் சிக்சுக்கு தகுதி பெறுவதற்கு பெருமளவு வாய்ப்புள்ளது எனவே தோல்விகளைக் கண்டு துவண்டு போகவேண்டி யதில்லை. அதே நேரம் எங்களுடைய விளையாட்டுப் பற்றியும் நாம் ஆடிவரும் விதம் பற்றியும் யோசிக்க வேண்டும் என்றார் கங்குலி.

அதேவேளை இந்திய அணியின் படு மோசமான தோல்விகளை அடுத்து, வீரர்களுக்கு எதிரான வன்முறைகள் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. கங்குலியின் வீட்டுக்கு முன்னால் ரசிகர்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தியதைத் தொடர்ந்து கர்நாடக மாநில கிரிக்கெற் வீரர்களான ராவிட், கும்ளே, ஸ்ரீநாத் ஆகியோரின் வீடுகளுக்கு உடனடியாக பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

## இன்றைய ஆட்டம்

**இங்கிலாந்து எதிர் நமீபியா**
(போர்ட் எலிசபத்)
2.00 P.M

**இலங்கை எதிர் கனடா**
(பார்ல் மைதானம்)
2.00 P.M

**சிம்பாப்வே எதிர் இந்தியா**
(ஹராரே மைதானம்)
2.00 P.M



இந்திய வீரர்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின் சில காட்சிகள்

# ஷேன் வோன் ஊக்க மருந்து பாவித்தமை இரண்டாவது சோதனையிலும் கண்டுபிடிப்பு

அவுஸ்திரேலிய சுழல் பந்து வீச்சாளர் ஷேன் வோன் ஊக்க மருந்து உட்கொண்டது இரண்டாவது சோதனையின் போதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.



இதனையடுத்து அவர் சர்வதேச கிரிக்கெற் பேரவையின் 2 ஆண்டு விளையாட்டுத் தடையை எதிர் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஊக்க மருந்துச் சோதனை நடத்திய அவுஸ்திரேலிய விளையாட்டுத் துறை மருந்து நிறுவனத்தின் விதிமுறைகளின் படி அவர் குற்றமிழைத்திருப்பதாக தீர்ப்பு வழங்கப் பட்டால், அவருக்கு விளை யாட்டுத் தடையுத்தரவு வழங்கப்படும்.

அவுஸ்திரேலிய அணி உலகக் கிண்ண போட்டியில் விளையாடுமுன் மெல் போர்னில் கடந்த மாதம் 22ம் திகதி நடந்த முதல் சோதனையில் அவர் ஊக்க மருந்து பாவித்தது தெரிய வந்தது. இதனை அடுத்து அவர் உலகக் கிண்ணப் போட்டியில் விளையாடுவதற்கு தடை விதிக்கப்பட்டது தெரிந்ததே.

உலக கோப்பை கிரிக்கெட்-2003

இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்துடன் இணைந்து

வலம்புரி

நடாத்தும் மாபெரும் கிரிக்கெற் பரிசுப்போட்டி

போட்டியில் பங்கு பற்றுங்கள்
பெறுமதியான பரிசை வெற்றி கொள்ளுங்கள்

1) இம்முறை உலகக்கிண்ணத்தை வெல்லும் அணி எது?

2) இப் போட்டியின் சகலதுறை ஆட்டக்காரர் யார்?

உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி
கிரிக்கெற் பரிசுப் போட்டி
வலம்புரி
இல 15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

உங்கள் விடையுடன் தவறாது
இக் கூப்பனை வெட்டி அனுப்புங்கள்

உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டி - 2003
முழுப்பெயர் : ..........
முகவரி : ..........
தே.அ.அ.இல : ..........
கையொப்பம்: ..........
அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி
மார்ச் 15, 2003

# வள்ளுவரால் வான் புகழ் கொண்டது தமிழ் நாடு
# திருக்குறள் நமக்கு வாழ்வியல் வேதமாகும்

நம் தாய்மொழி தமிழ். தமிழ் மொழியில் பல சிறந்த நூல்கள் உள்ளன. அவற்றுள் பொய்யாமொழிப் புலவராகிய திருவள்ளுவர் பெருமானால் இயற்றப்பட்ட திருக்குறள் நம் வாழ்வுக்குவழி காட்டியாக அமைகின்றது.

### வள்ளுவரின் வாழ்க்கை

திருவள்ளுவர் தமிழ் நாட்டில் பிறந்தார். இயற்பெயர் நெடுமாறன். வள்ளுவர் என்பது குடிப்பெயராகும்.

வள்ளுவரின் மனைவியாக வாய்க்கப் பெற்ற வாசுகியின் அடக்கமும், பணிவும், கற்பும், பொற்பும் உலகெல்லாம் கொண்டாடத்தக்கன. கணவனும் மனைவியும் இரு கண்கள் போல பொருந்தியிருந்தன. அருந்தல், பொருந்தல், அனந்தலில் நிறை முறையுடன் நடந்து நோயற்று வாழ்ந்தனர். அறவழி நின்றனர். நெசவில் வந்ததைக் கொண்டு மகிழ்ந்தனர். எளிமையும் செம்மையும் பூண்டனர். நல்வினையாற்றினர். விருந்தோம்பினர். வீண் வம்பகற்றினர். பழிபகை கொள்ளாது இன்பமாக வாழ்ந்தனர்.

வாசுகி காலத்திற்குப் பின்னர் வள்ளுவர் துறவு பூண்டு குறட்பாக்களை உபதேசித்து வந்தார். இறுதி நாளில் உயிர் பிரிந்ததும் இவ்வுடலைக் காக்கை, கழுகு உண்ணும்படி போட்டு விடுக என்றார். தனது உடலைத் தங்கப் பேழையில் வைக்க விரும்பிய சிங்கனை தடுத்தார். குறித்த நாளில் உயிர் பிரிந்தது. யாக்கை, காக்கைக்கு இரையாகிறது. ஆங்கே வள்ளுவர் கோயில் இன்றும் உள்ளது.

### திருவள்ளுவரின் பெருமை

திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் பெருமானைப் புகழ்ந்து இந்தியாவில் எட்டயபுரத்தில் பிறந்த மகா கவி சுப்பிரமணிய பாரதியார்

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு''

என்று பாடியுள்ளார்.

முதற்பாவலர் செந்நாப்போதார், பெருநாவலர், தேவர் என திருவள்ளுவருக்கு வழங்குகின்ற சிறப்புப் பெயர்கள் அவருடைய பெருமைக்கு சான்று பகர்கின்றன. இவர் இவ்வுலகில் மக்கள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய முதுபெரும் ஞானியராவர்.

### திருக்குறளின் மகிமை

திருக்குறள் சாதி,மத,பேத மின்றி எல்லோரும் எக்காலத்தும் தம் உலகியல் வாழ்க்கைக்கும் ஆன்மீக வாழ்க்



கைக்கும் உறுதுணையாகக் கொள்கின்ற ஒப்பற்ற நீதி நூலாகும்.

திருக்குறளை ''உலகப் பொது மறை'' என்றும் ''தமிழ்மறை'' என்றும் கூறுவர். இது உலகப் பொது மறையாய் விளங்குவதால் உலகின் அதிக நாடுகள் தத்தமது மொழியில் மொழி பெயர்த்த ஒரேயொரு அறநெறி நூலாகும். சமய முறையில் இதை திருவள்ளுவர் ஆக்கியிருந்தால் அதிக உலக நாடுகள் இதைப் பொது மறையாக எடுத்திருக்க முடியாது. அவர் எவ்விடத்திலும் சமயக் கருத்துக்களைப் புகுத்தாது செய்யும் தொழிலைத்தான் முதன் நிலைப்படுத்திக் கூறியிருக்கின்றார்.

### திருக்குறள் பொருளடக்கம்

திருவள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறள் 1330 குறள் வெண்பாக்களைக் கொண்டது. இதில் 133 அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வோர் அதிகாரமும் 10 குறள் வெண்பாக்களைக் கொண்டது.

திருவள்ளுவர்குருபூசைதினம்இன்று

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பொருள் பிரிவுகள் இந்நூலில் உண்டு. பால் என்றால் பகுதி அல்லது பிரிவு என்பது பொருளாகும். அறத்துப்பால் கடவுள் வாழ்த்து முதல் ஊழ் அதிகாரம் வரையும் (குறள்1 முதல் 380 வரை), பொருட்பால் இறைமாட்சி முதல் கயமை அதிகாரம் வரையும் (குறள் 381முதல்1080வரை), காமத்துப்பால் தகையணங்குறுதல் முதல் ஊடலுவகை அதிகாரம் வரையும் (குறள் 1081 முதல் 1330 வரை) அமைந்துள்ளது.

### திருக்குறளில் உள்ள நீதிக் கருத்துக்கள்

திருக்குறளில் உள்ள நீதிக் கருத்துக்கள் மனிதன் வையத்துள் வாழ்வாங்கு வாழும் வழிமுறைகளை வரையறுத்துக் கூறுவன. கடவுளை வாழ்த்துதலும், இன்சொல் பேசுதலும், ஒருவர் செய்த நன்றியை நினைவில் கொள்ளுதலும், ஒழுக்கமுடன் இருப்பதும், உண்மை பேசுதலும், கல்வி கற்றலும் ஆகிய நற்பண்புகள் எமது வாழ்வை வளப்படுத்துவன. வள்ளுவர் அக்கருத்துக்களை எடுத்துக் கூறும் முறையினை கீழ் வரும் குறட்பாக்கள் மூலம் அறியலாம்.

### கடவுள் வாழ்த்து

''அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'' (1.1)

எழுத்துக்கள் எல்லாம் ''அ'' கரமாகிய எழுத்தை முதலாகக் கொண்டுள்ளன. அதுபோல உலகமானது ஆதிபகவானாகிய இறைவனை முதல்வனாகக் கொண்டுள்ளது.

### இனியவை கூறல்

''பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப்பிற'' (10.5)

-பிறர் பால் தாழ்ச்சியுடையனாதலும் எல்லாரிடத்தும் இனிய சொற்களைக் கூறுதலும் ஒருவனுக்கு அணியாகும். இவை தவிர்ந்த உடல் ஆபரணங்கள் அணி ஆகாது.

### செய்நன்றி அறிதல்

''நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று'' (11.8)

-ஒருவர் செய்த நன்மையை மறப்பது அறமன்று. அவர் செய்த தீமையை அப்போதே மறப்பது நல்ல அறமாகும்.

### ஒழுக்கமுடைமை

''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்'' (14.1)

-ஒழுக்கம் என்பது சிறப்பைத் தருவதால் உயிரிலும் மேலானதாகும்.

### வாய்மை

''மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ் செய்வாரின் தலை'' (30.5)

-உண்மை சொல்லுபவர் தவத்தோடு தானமும் செய்வாரை விட மேலானவர்.

### கல்வி

''கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக''

-கற்கத் தகுந்த நூல்களை குற்றமறக் கற்று அங்ஙனம் கற்றதற்கு ஏற்ப நிற்க வேண்டும்.

அன்புள்ள தமிழ் மக்களே, உணர்வீர்! உணர்வீர்! நமக்கென்று ஒரு பண்பாடு உண்டு. அதன் பெயர் தமிழ்ப் பண்பாடு. தமிழ்ப் பண்பாட்டை உணராதவரை தமிழ் மொழி முதன்மை பெறாது. தமிழினம் எழுச்சி பெறாது. நமது வழி தமிழியம். நம் வாழ்வு தமிழியம். நமது நெறி தமிழியம்.

எனவே, பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவர் பெருமானால் இயற்றப்பட்ட உலக பொதுமறையும் தமிழ் மறையுமான திருக்குறளை நாம் குற்றமறக் கற்று நல்ல பயன் பெறுவோம்!

**ஆழியூர் சீ.ஏ.யசீகரன்**

---

## சமாதான நீதிவானாக நியமனம்

(யாழ்ப்பாணம்)



பருத்தித்துறை நெல்லண்டையைச் சேர்ந்த இளைப்பாறிய அரச உத்தியோகத்தர் சி. கமலேஸ்வரன், நீதி அமைச்சினால் அகில இலங்கைச் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கமலேஸ்வரன் அனுராதபுரம், முல்லைத்தீவு மாவட்ட நீதி மன்றங்களிலும், யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியிலும் பதிவாளராகவும், வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகம், பருத்தித்துறை பிரதேச செயலகங்களில் நிர்வாக அதிகாரியாகவும், பருத்தித்துறை சபைச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

சிறந்த சமூக, சமய சேவையாளரான இவர் பிரசித்திபெற்ற ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய தொண்டராகவும் பணியாற்றி வருகின்றார்.

## அதிபர்கள் கூட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் பாடசாலை சமாதானத் தினத்தை நடாத்துவதற்கான நடவடிக்கைகளை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் மேற்கொண்டுள்ளார். இப்பாடசாலை சமாதான தினம் சம்பந்தமான அதிபர்களுக்கான கூட்டம் இன்று பி.ப. 2.30 மணிக்கு புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறு மென பிரதிக்கல்விப்பணிப்பாளர் வி.அருளானந்தம் அறிவித்துள்ளார். (உ-52)

---

மாணவர்களை அனுமதிக்க

## பணம் அறவிடும் அதிபர்களைக் கண்காணிக்கப் பணிப்பு

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிக்கும் போது அதிபர்களால் பெருமளவு பணம் அறவிடப்படுவது குறித்து நேரடிக் கண்காணிப்புச் செய்யுமாறு சகல கல்விப்பணிப்பாளர்களுக்கும் வடக்கு-கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் எஸ். மகாலிங்கம் உத்தரவிட்டுள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் புதிய மாணவர்களை அனுமதிக்கும் போது அதிபர்களால் பெற்றோர்களிடம் இருந்து பெருமளவு பணம் அறிவிடப்படுவதாகவும் அன்பளிப்புப் பொருட்கள் பெறப்படுவதாகவும் வடக்கு-கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரிற்கு கிடைத்த முறைப்பாட்டினையடுத்தே இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பாடசாலை அதிபர்கள் இவ்வாறு சட்டங்களை மீறி பணம் வசூலிப்பவர்களாயின் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்துள்ளார். (உ-10)

## நாட்டு மக்களுக்கு பிரதமர் உரை

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டு ஒருவருடம் நிறைவு பெறுவதையிட்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 22ஆம் திகதி மாலை6.50ற்கு ஊடகங்களினூடாக நாட்டு மக்களுக்கு உரையாற்றவுள்ளார். (உ-3)

## மேற்பார்வையாளர்களுக்கு ஆறு மாதக் கொடுப்பனவு

(திருகோணமலை)

வடமாகாணத்தில் உள்ள அனைத்து முகாம்களிலும் மேற்பார்வையாளராக கடமையாற்றியவர்களுக்கு மீண்டும் நியமனங்களை வழங்குவதுடன், இடைநிறுத்தப்பட்ட 6 மாதகாலக் கொடுப்பனவுகளையும் வழங்க அரசினால் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வன்னி மாவட்ட புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் இவ்விடயம் தொடர்பாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கு கொண்டு வந்ததை அடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

84 முகாம்களிலும், 69 நலன்புரி முகாம்களிலும் கடமையாற்றிய 140 அதிகாரிகளின் நியமனங்கள் இடைநிறுத்தப்பட்டதுடன், 6 மாதங்களாக சம்பளமும் வழங்கப்படாதிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

வாழ்க்கைச் செலவு உயர்வைக் கண்டித்து

## எதிரணியினர் உரத்த குரலில் கோஷமெழுப்பி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

விஷம் போல் ஏறியுள்ள வாழ்க்கைச் செலவுயர்வைக் கண்டித்து, பொது ஜன ஐக்கிய முன்னணி நேற்று முன்தினம் கொழும்பில் கோஷம் எழுப்பி மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் அலவி மௌலானா ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற இவ்வார்ப்பாட்டம் கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் நடைபெற்றது.

பாணின்விலை உயர்வை எடுத்துக் காட்டும் வகையில், பாணின் பழைய விலையும், புதிய விலையும் பொறிக்கப்பட்ட பாண் ஒன்றை தடியில் குத்தியவாறு பானை, சட்டிகளில் அடித்து கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் எதிரணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டனர்.

இதேபோன்ற ஆர்ப்பாட்டங்களை நாடு தழுவிய ரீதியில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம)

## வர்த்தக உறவை வலுப்படுத்தும் முயற்சி

(கொழும்பு)

இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் வர்த்தக மட்டத்திலான புதிய பேச்சு வார்த்தைகளில் இருநாடுகளும் ஈடுபட்டுள்ளதாக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவிகருணாநாயக்கா தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கிடையிலும் உள்ள சந்தை வளத்தை மேம்படுத்தி அதன் மூலம் இருநாடுகளிற்குமிடையில் நிலவும் வர்த்தக இடைவெளியை குறைக்கும் வகையில் இப்பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும் குறிப்பிட்ட அமைச்சர் ரவிகருணாநாயக்கா,

தற்போது இலங்கையில் இருந்து 500 மில்லியன் ரூபா பெறுமதியான உற்பத்திகள் சீனாவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

அத்துடன் 80மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்கள் அங்கிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன என்றார்.

இதேவேளை, இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சீனாவின் வெளிநாடுகளிற்கான வர்த்தக மற்றும் பொருளாதார விவகார பிரதி அமைச்சர் ஆம் மிங்குடன் அமைச்சர் ரவிகருணாநாயக்கா இது தொடர்பில் பேச்சு நடத்தியுள்ளார்.

இரு நாடுகளிற்கும் இடையில் விமான சேவையினை நடத்துவது பற்றியும், விசா பிரச்சினை பற்றியும் இதில் பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-10)

## நெற் களஞ்சியப் பெட்டிகள் கொள்வனவு

(கொழும்பு)

50 மெற்றிக் தொன் நெல்லைக் களஞ்சியப்படுத்தக் கூடிய 100 பெட்டிகளை உடனடியாக இறக்குமதி செய்வதற்கு விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நெல்லை அதிகமாக உற்பத்தி செய்யும் மாவட்டங்களுக்கு இப்பெட்டிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

இவ்வாறான பெட்டி ஒன்றின் விலை 12 லட்சம் ரூபா எனவும் இத்தகைய பெட்டிகளில் ஒரு வருடத்திற்கு பீடைத் தாக்கம் இன்றி நெல்லைப் பாதுகாத்து களஞ்சியப்படுத்த முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)



நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் விஜயம் செய்த சுவீடன் தூதுக்குழுவால் நடத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில், சுவீடன் தூதர் அன்மேரி பல்நியாஸ், இலங்கை கைத்தொழிலாளர் சம்மேளன செயலாளர் சமந்த பி அபயவிக்கிரம, உதவியாளர் நெல்சன் கியூபா ஆகியோர் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். படம்: க.பவன்

# ஒத்துழைப்பு வழங்க மறுத்தால்

# போரே இறுதி முடிவாகும்

**ஈராக்கிற்கு ஐரோ. ஒன்றியத் தலைவர்கள் எச்சரிக்கை**

(வாஷிங்டன்)

ஈராக் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். அவ்வாறு வழங்காத பட்சத்தில் போரையே எதிர்நோக்க வேண்டி ஏற்படும் என்று ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பிரஸல்ஸில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர்கள் கலந்து கொண்ட விஷேட உச்சிமாநாட்டின போது இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்கள் இல்லையென்பதை நிரூபிக்க சதாம் ஹுசைனுக்கு எவவளவுகால அவகாசம் வழங்குவது என்பது குறித்து இந்த மாநாட்டின் போது ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் எவ்வித முடிவுக்கும் வரவில்லை.

இதனையடுத்த, ஈராக்மீது யுத்தம் நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துவரும் ஜேர்மன் அதிபர் ஜெகாஷ்ட்ரோடர், ஈராக் விடயத்தில் ஒரு முடிவு காண்பதற்கான காலம் கடந்து கொண்டிருப்பதாக அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

ஈராக்கிற்கு எதிராக அமெரிக்கத் தலைமையில் போர் நடத்துவது சரியா, தவறா என்பதுகுறித்து ஐரோப்பிய நாடுகளிடையே முரண்பாடுகள் தோன்றியுள்ள நிலையில்,

ஒரு முகமான ஒருமுடிவை எடுக்கும் வகையில் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களின் உச்சிமாநாடு நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

அதில் எவ்வாறாயினும் ஈராக்கிற்கு ஒரு இறுதி சந்தர்ப்பம் வழங்குவது என்ற இணக்கப்பாட்டிற்கு ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் வந்துள்ள போதும், அதற்காக எவ்வளவு கால அவகாசம் வழங்குவது என்ற தீர்மானத்தை அவர்கள் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. (பி-2)



சிக்காகோ இரவு விடுதியை பொலிஸ் வாகனங்கள் கடந்த திங்கட்கிழமை இரவு சுற்றிவளைத்தன. இந்நெரிசலில் சிக்கியும், நசுக்கப்பட்டும் 21பேர் மரணமானார்கள்.

# தென் கொரிய ரயிலுக்கு தீவைப்பு

## 5பேர் பலி, 125பேர் காயம்

(சியோல்)

தென்கொரியாவில் நேற்று ரயில் ஒன்றுக்குத் தீயிடப்பட்ட சம்பவத்தில் 5பேர் உயிரிழந்துள்ளதுடன் 125பேர் காயடைந்துள்ளனர்.

தென்கொரியாவின் மூன்றாவது பெரிய நகரமான, டேகுவிலுள்ள நிலத்தடி ரயில் நிலையத்தில் வைத்தே இந்த ரயிலுக்குத் தீ வைக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு வீரர்களுக்கான சீருடையுடன் காணப்பட்ட நபர் ஒருவர் விரைவில் எரியக்கூடிய எரிபொருள் நிரப்பிய கலன் ஒன்றைப் பற்ற வைத்து ரயில் மீது வீசிய போது ரயில் தீப்பற்றிக் கொண்டது என்று, சாட்சியொருவர் கூறியதாக செய்திகள் கூறுகின்றன.

இந்த தீ வைப்புச் சம்பவம் இடம்பெற்ற 4மணி நேரத்தின் பின்னரும் கரும்புகை எழுந்த வண்ணம் உள்ளதாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டு வைத்திய சாலையில் சிகிச்சையளிக்கப்பட்ட பின்னர் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச செல்லப்பட்டுள்ளார். எனினும இச சம்பவம் நிகழ்ந்ததற்கான அடிப்படைக்காரணம் இதுவரை தெரியவில்லையென தென் கொரிய அரசவட்டாரங்கள் கூறுகின்றன.

இதேவேளை, வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் காயமடைந்தபயணிகள் பலரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதென வைத்திய சாலை வட்டாரங்கள் கூறுகின்றன. (பி-2)



பலஸ்தீன துப்பாக்கி மனிதன் ஒருவன் காஸா நகரில் இஸ்ரேலியரால் சுடப்பட்டுக்கிடப்பதனையே இங்கு காண்கிறீர்கள்

# சிக்காகோ விடுதியில் ஏற்பட்ட குழப்பம்

*21 பேர் நெரிசலில் மரணம்*

(சிக்காகோ)

சிக்காகோ நகரிலுள்ள இரவு விடுதியில் ஏற்பட்ட ஒரு கலவரத்தின் போது தப்பிச் செல்வதற்கு முயற்சித்தவர்களில் நெரிசலுக்குள்ளாகியும், கதவுகளுக்குப் பின்னால் நசுங்குண்டும் இருபத்தொருபேர் பலியானார்கள்.

கடந்த திங்கட்கிழமை இரவு இந்த விடுதியில் ஏற்பட்ட ஒரு சண்டையை நிறுத்துவதற்கு பொலிஸார் மிளகாய்த்தூள்களை காற்றில பரப்பிவிட்டார்கள். இதன் தாக்கத்திலிருந்துதப்புவதற்காக மக்கள் நெரிசல்பட்டதில் இந்த மரணங்கள் சம்பவித்தன.

விடுதியில் அப்பொழுது இருந்த ஒரு இளம்பெண் காயமடைந்தவர்களுக்கு உதவி புரிந்தார். அனேக மானவர்கள் என்கையிலேயே உயிரை விட்டார்கள் என்றார் அவர். விடும் தறுவாயில் ஓர் இளைஞன் தனது தாயாரிடம் அவரைத்தாம் நேசிப்பதாகக் கூறும்படி கேட்டுக் கொண்டான் என்றார். (பி)

*அயோத்தி பிரச்சினையில்*

# நீதிமன்ற தீர்ப்புக்கு யாவரும் கட்டுப்படவேண்டும்

*இந்திய ஜனாதிபதி*

(புதுடில்லி)

''அயோத்திப்பிரச்சினையில் கோர்ட் தீர்ப்புக்கு சம்பந்தப்பட்ட அனைவரும் கட்டுப்படவேண்டும்'' என்று ஜனாதிபதி அப்துல்கலாம் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும மதத்தலைவர்களையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தியாவுக்குள் ஊடுருவல் அதிகம் நடக்கிறது என்று குறிப்பிட்ட அவர் இதை தடுக்க போதுமான நடவடிக்கைகளை எடுக்க அரசு உறுதி பூண்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். கடந்த காலங்களில் பொருளாதார செயல்பாடுகள் பற்றி குறிப்பிட்ட அவர் அதில் தமக்கு திருப்தி ஏற்பட்டுள்ளது என்றும் சொன்னார். அயோத்திப்பிரச்சினை தற்போது விஸ்வரூபம் எடுத்துள்ளது.

இது தொடர்பாக மத்திய அரசு சுப்பிரீம் கோட்டில் தொடர்ந்துள்ள வழக்கால் எதிர்க்கட்சிகள் அதுருப்தி அடைந்துள்ளன. பாராளுமன்றத்தில் பிரச்சினை கிளப்பவும் எதிர்க்கட்சிகள் முடிவு காட்டியுள்ளன. அயோத்திப் பிரச்சினை குறித்தும் ஜனாதிபதி அப்துல்கலாம் தனது உரையில் குறிப்பிட்டார். இது குறித்து தனது உரையில் ஜனாதிபதி கூறியதாவது,

அயோத்திப் பிரச்சினையில் நீதிமன்றத்தீர்ப்பை அனைத்து அரசியல் கட்சிகளும், மதத் தலைவர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும். நீதித்துறையும் தனது பணியை விரைவு படுத்தித்தீர்ப்பை விரைவில் வழங்க வேண்டும். ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு ஒரு நல்லெண்ணச் சூழ்நிலையை அனைவரும் உருவாக்க வேண்டியது அவசியம். அயோத்திப் பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கலாம் அல்லது கோட் மூலம தீர்க்கலாம் என்பதுதான் அரசின் கொள்கை. அதுல்அரசு தெளிவாகவே இருக்கிறது. இதை சம்பந்தப்பட்ட அனைவரும் ஏற்றுக்கௌள்ள வேண்டும்.

நாட்டின் பாதுகாப்பு என்பது இந்த அரசுக்கு மிக முக்கியமான ஒன்று. டிசம்பர் 13ஆம் திகதி பாகிஸ்தான் தீவிரவாதிகளால் நமது பாராளுமன்றம் தாக்கப்பட்ட பிறகு சர்வதேச எல்லையில் தமது படைகளை நாம் குறித்தோம் இந்த முடிவு நல்ல பலனைக் கொடுத்தது. நமக்கு எதிரியாக விளங்கும் அண்டை நாட்டுடன் தீவிரவாதத்தைச் சமாளிப்பதில் நாம் பொறுமையையும் அதே நேரம் உறுதியையும் காட்டி வருகின்றோம். கவனமாக பரிசீலித்த பிறகுதான் நாம் படைகளைக் குவித்தோம் என்றாா. (பி)

# ஹமாஸ் இயக்கத் தலைவர் கொல்லப்பட்டார்

(காயா)

பலஸ்தீனியத் தலைவர் ஒருவர் இஸ்ரேலியப் படையினர் ஒருவரால் கொல்லப்பட்டார். றியா அபுசெய்த் எனப் பெயர் கொண்ட ஹமாஸ் அமைப்பின் இராணுவப் பிரிவுத் தலைவர் கைதுசெய்யப் படுவதற்கு முன்னர் இடம் பெற்ற துப்பாக்கிச் சமரில் காயமடைந்தார் என்றும், இஸ்ரேலிய ஆஸ்பத்திரி ஒன்றுக்கு ஹெலியில் கொண்டு செல்லப்படுகையில் மரணமடைந்ததாக இஸ்ரேலியர் கூறினர்.

இஸ்ரேலிய தாங்கி ஒன்று 4 பேருடன் தகர்க்கப்பட்டமைக்கு ஹமாஸ் இயக்கம் உரிமை கோரியிருந்தது. அதற்குப் பதில் நடவடிக்கையாகவே அவ்வியக்கத்தின் தலைவர் கொல்லப்பட்டுள்ளார் என்று பலஸ்தீனியர் கருதுகின்றார்கள்.

கடந்த ஞாயிறன்று 6 ஹமாஸ ஆதரவாளர்கள் கொல்லப்பட்டதன் பின் நடந்த சவ அடக்கத்தில் சுமார் ஒரு லட்சம் பேர் கலந்து கொண்டனர். (பி)

# அமெரிக்க நகர்களை உலுப்பிய பனிப்புயல்

(பூஸ்டன்)

அமெரிக்காவில் கடந்த திங்களன்று வீசிய கடும் பனிப்புயலொன்று பெரும் அனர்த்தங்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் பனிப்புயலின் காரணமாக வாஷிங்டனுக்கும் நியூயோர்க்குக்கும் இடையிலான விமான நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டதால் ஆயிரக்கணக்கான பயணிகள் பாதிப்புற்றனர். விடுமுறை கால விற்பனை நிலையங்கள் ஸ்தம்பிதமடைந்தன.

பனி மூட்டம் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தமையால் வீதிகளில் சுமார் இரண்டடி அளவிற்கு பனி உறைந்து விட்டது. பனி அகற்றும் ஊழியர்கள் பனிகட்டிகளை வெட்டி அப்புறப்படுத்தி வீதிகளை துப்பரவு செய்தார்கள். இந்தப் பனிமழையால் கென்டக்கிளகரிலிருந்து நியூயோர்க் வரை ஏறத்தாழ பத்துப் பேர் பலியானார்கள். மேவுலாந்திலும், வெஸ்ட் வேர்ஜினியாவிலும் பனி அகற்றும் பணியில் ஈடுபட்ட இருவர் மாரடைப்பால் மரணமானார்கள்.

நியூயோர்க் நகரில் கூரை விழுந்து ஒருவர் பலியானார். நால்வர் காயமடைந்தனர்.

ஈராக் தொடர்பான கூட்டம், நடைபெறவிருந்த பாதுகாப்புச் சபையின் கூட்டம் பலமணி நேரம் ஒத்திவைக்கப்பட்டது. (பி)



அமெரிக்காவை உலுப்பிய பனிப்புயல்

# தரம்-5 புலமைப்பரிசில்
## பயிற்சி வினாத்தாள்
**வினா இல : 04 ஆக்கம் : சுந்தர் வெளியீடு**

✳ **கீழ்வரும் பகுதியைக் கவனமாக வாசித்து அதன் கீழே உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

அது ஒரு அழகிய கிராமம். அங்கு வளங்களுக்குத் தட்டுப்பாடு இல்லை. ஓங்கிவளர்ந்த பனை மரங்களும், தென்னை மரங்களும் பழம் தரும் பலா, மா, வாழை போன்ற மரங்களும் அதிகளவில் நிறைந்து நிழல் கொடுத்தது. குளங்களும் கிணறுகளும் மக்களுக்கு நீர்த் தேவையை பூர்த்தி செய்தன. மக்கள் கிணறுகளில் இருந்து நீரை எடுக்க துலா, கப்பி போன்வற்றை பயன்படுத்தினர். இங்கு பயிர்ச்செய்கைக்கும் குறைவில்லை. மிளகாய், வெங்காயம், பாகல், புடோல், கத்தரி எனப் பலவகைப் பயிர்களும் பயிரிடப்பட்டன.

01. இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பழமரங்கள் எவை?
...................................................................
02. இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நீர் நிறைந்து காணப்படும் அமைப்புக்கள் எவை?
...................................................................
03. கிணற்றில் இருந்து நீரை எடுக்க மக்கள் எவற்றைப் பயன்படுத்தினர்?
...................................................................
04. பந்தியின் படி இக்கிராமத்தில் பயிரிடப்பட்டுள்ள பயிர் வகைகள் எவை?
...................................................................
05. நீர் மேலே குறிப்பிட்டுள்ள பயிர் வகைகளுள் படரும் தன்மை கொண்ட பயிர் வகை எது?...................................................................

✳ **கீழ்த் தரப்படும் சொற்களின் கருத்தைத் தரும் சொற்கள் பந்தியில் உண்டு. அவற்றைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.**

06. விருட்சம்.............................. 07. உபயோகித்தனர்..............................

✳ **கீழ்வரும் சொற்களின் எதிர்ச்சொல் தருக.**

08. இல்லை.............................. 09. பழம்..............................

**இப்பாடலை வாசித்து விடை எழுதுக.**

பாட்டியின் வீட்டுப் பழம்பானை
பானையின் ஒரு புறம் ஓட்டை யடா
ஓட்டை வழியொரு சுண்டெலியும் - அதன்
உள்ளே புகுந்து நெல் தின்றதடா

09. பழம் பானை யாருடையது?..............................
10. ஓட்டை வழியே புகுந்தது எது?..............................
11. அது எதைத் தின்றது?..............................
12. ஓட்டை என்பதன் ஒத்த கருத்துடைய சொல் எது?..............................

✳ **கீழ்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்து நிறைந்த வாக்கியமாக எழுதுக.**

13. முன்னறி / அன்னையும் / தெய்வம் / பிதாவும்
...................................................................
14. வேண்டும் / பந்தியாக / ஒவ்வொரு / வாசிக்க / நாங்கள்
...................................................................
15. நாம்/ வேண்டும் / செயற்பட / சிந்தித்து
...................................................................

✳ **கீழ்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

16. நூல் + அகம்.............................. 17. மா + பழம்..............................

✳ **கீழ்வரும் சொற்களை பிரித்து எழுதுக.**



18. எண்ணூறு.............+................ 19. நாட்டுமக்கள்.............+ ..............



✳ **கீழே உள்ள வாக்கியத்தில் உள்ள சொற்களில் சில எழுத்துக்கள் தவறவிடப்பட்டுள்ளன. அந்த இடத்தில் வரவேண்டிய சரியான எழுத்தை எழுதுக.**

20. செல்......ங்களுள் சிறந்த செல்வம்......ல்விச் செல்வம். அது ஈடு........ ணை யிலாச் செல்வம்

✳ **கீழே சில படங்கள் தரப்படுகின்றன. இப்படங்களில் காணப்படும் ஊடகங்கள் பயணம் செய்யும் பாதைகளை எழுதுக. உதவியாக அடைப்புக்குள் தரப்பட்டுள்ளவற்றுள் பொருத்தமானதைத் தெரிவு செய்து எழுதுக.**

**தரை, வான், நீர், தண்டவாளம்**



  



  

✳ **நிரல் I இல் உள்ளவற்றுடன் சரியாகத் தொடர்புபடும் சொற்களை நிரல் II இல் இருந்து தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தை நடுவேயுள்ள கூட்டினுள் எழுதுக. உதாரணத்தை அவதானிக்குக.**

| | | | |
|---|---|---|---|
| | பொருள் விற்க வாங்க செல்லும் இடம் | 2 | 1. வைத்தியசாலை |
| 27. | கல்வி கற்கச் செல்லும் இடம் | | 2. சந்தை |
| 28. | வழிபாடு செய்ய செல்லும் இடம் | | 3. மைதானம் |
| 29. | விளையாடச் செல்லும் இடம் | | 4. பாடசாலை |
| 30. | நோய் மாற்றச் செல்லும் இடம் | | 5. ஆலயம் |


✳ **சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

31. ஒரு அப்பியாசக் கொப்பியின் விலை ரூபா 9/= எனின் 12 அப்பியாசக் கொப்பிகளின் விலை என்ன?
ரூபா.................. சதம்..........................
32. ரூபா 25 இற்கு 5 பென்சில்கள் வாங்கலாம் எனின் ஒரு பென்சிலின் விலை என்ன?
ரூபா.................. சதம்
33. ஒருவருக்கு அரை இறாத்தல் பாண் வீதம் கிடைக்கத் தக்கதாக 5 இறாத்தல் பாண் இனை எத்தனை பேருக்கு பங்கிட்டுக் கொடுக்கலாம்?
...................................................................
34.  அருகேயுள்ள உரு ஆனது எத்தன்ன சிறிய சதுரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.?
...................................................................
35.  அருகேயுள்ள உருக்களில் அதிக எண்ணிக்கையில் காணப்படும் உருவின் பெயரை எழுதுக.
...................................................................

36. சதுரம் ஒன்றிற்கு எத்தனை பக்கங்கள் உண்டு?..............................
37. கீழே உள்ள எண்சட்டங்கள் குறிக்கும் எண்களை எழுதுக.
1)  ..............................
2)  ..............................
38. கீழே தரப்பட்டுள்ள எண்ணுக்கு முந்திய எண்ணையும் பிந்திய எண்ணையும் கூட்டுக்குள் எழுதுக.

| | | |
|---|---|---|
| | **499** | |

39. "மூன்று மீற்றர் இருபத்தைந்து சென்ரிமீற்றர்" என்பதை குறியீடுகளுடன் எழுதுக.
...................................................................
40. 1/4 பங்கு நிறந் தீட்டப்பட்டுள்ள படங்களின் இலக்கத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக.



✳ **சரியான விடையைத் தெரிவு செய்க.**

41. 5 ஆல் வகுபடத்தக்க எண் எது?
1) 27 2) 30 3) 91 4) 63
42. கீழ்வரும் எண்களுள் இரட்டை எண்எது?
1) 10 2) 13 3) 27 4) 19
43. நீளத்தை அளக்கும் அலகு அல்லாதது.
1) cm 2) m 3) mm 4) kg
44. 5,15 ஆகிய எண்களின் கூட்டுத்தொகையை முதலிலும் வித்தியாசத்தை அதன் பின்னராகவும் கொண்ட விடை
1) 10, 20 2) 20,10 3) 15,5 4) 20, 5
45. கோள வடிவான பொருளுக்கு உதாரணம்
1) சீவாத பென்சில் 2) வெற்றுத் தீப்பெட்டி 3) தேசிப்பழம் 4) பலாப்பழம்

✳ **வியாபாரி ஒருவர் வாரத்தில் 5 நாட்களில் விற்பனை செய்த பழவகைகளின் எண்ணிக்கை பற்றிய விபரம் வருமாறு**

திங்கள் =100 செவ்வாய் =75 புதன் =110 வியாழன் =55 வெள்ளி =38

46. எந்த நாளில் அதிகளவு பழங்கள் விற்பனையாகியது?
...................................................................
47. எந்த நாளில் குறைந்தளவு பழங்கள் விற்பனையாகியது?
...................................................................
48. திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமையிலும் எத்தனை பழங்கள் கூடுதலாக விற்பனையாகியது?
...................................................................
49. வியாழன் வெள்ளி ஆகிய இருநாட்களிலும் விற்பனையாகிய பழங்கள் எத்தனை?
...................................................................
50. இந்த வாரத்தில் அதிகளவில் விற்பனையாகிய பழங்களின் எண்ணிக்கைக்கும் குறைந்தளவில் விற்பனையாகிய பழங்களின் எண்ணிக்கைக்கும் இடையேயான வித்தியாசம் எவ்வளவு?

✳ **சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

51. உமது பெயரை எழுதுக.
...................................................................
52. உமது கிராமத்தின் பெயரை எழுது.
...................................................................
53. உமது பாடசாலையின் பெயரை எழுதுக.
...................................................................
54. நீர் பேசும் மொழியை எழுதுக.
...................................................................
55. உமது நாட்டின் பெயரை எழுதுக.
...................................................................

✳ **கீழே கூட்டுக்குள் தரப்பட்டுள்ளவற்றுள் பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளியை நிரப்புக**


**பசு, கிளி, நாய், காகம், கோழி, பூனை, குதிரை**

56. வீட்டைக் காக்க வளர்க்கப்படும் விலங்கு.............................. ஆகும்.
57. வீட்டில் செல்லமாக வளர்க்கப்படும் பறவை.......................... ஆகும்.
58. வீட்டில் பயன்பெறும் நோக்கோடு வளர்க்கப்படும் பறவை.................. ஆகும்
59. வீட்டில் பயன்பெறும் நோக்கோடு வளர்க்கப்படும் விலங்கு.............ஆகும்.
60. எமது வீட்டிலும் அயலிலும் சுத்தம் பேணும் பறவை...................... ஆகும்.

✳ **கீழ்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் இடைவெளியில் எழுதுக.**

61. எமது வீட்டுச் சூழலில் சிங்கத்தை அவதானிக்கலாம் (...............)
62. கற்களின் கீழ் தவளை காணப்படும் (...............)
63. தாவரங்கள் வாழ்வதற்கு நீர் அவசியமாகும் (...............)
64. வௌவால் இரவில் பறக்கும் (...............)
65. தாவரத்தின் அழகான பாகம் பூ ஆகும் (...............)

✳ **படத்தை அவதானித்து அதனுடன் தொடர்புடைய சொற்களில் விடுபட்டுள்ள எழுத்துக்களை எழுதுக.**

66.  Ni.........e
67  C.......r
68  Fa.........e

✳ **கீழ்வரும் சொற்களின் கருத்தைத் தரும் தமிழ்ச் சொற்களை எழுதுக.**

69. FRIDAY ..............................
70. FRIEND ..............................
71. DOG ..............................

✳ **கீழ்வரும் தமிழ்ச் சொற்களின் சரியான ஆங்கிலச் சொற்களை எழுது.**

72. பால் ..............................
73. பேனா ..............................
74. புத்தகம் ..............................
75. கண் ..............................

✳ **"எனது அம்மா" எனும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய், பயனிலையுடன் அமைந்த 6 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் 4 சொற்களுக்குக் குறையாது அமைந்திருக்க வேண்டும்.**

76. ..............................
77. ..............................
78. ..............................
79. ..............................
80. ..............................
81. ..............................

**5ம்தர புலமைப்பரீட்சை**
**வினாத்தாள் - 4**

மாணவர் முழுப்பெயர்..............................
பாடசாலையின் பெயர் :..............................
வீட்டின் முகவரி:..............................
மாணவர்களே உங்கள் விடைகளை 26.02.2003 க்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுக்கு இக்கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

அனுப்பவேண்டிய முகவரி
வலம்புரி, கல்விப்பகுதி
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# தாய்நாட்டில் பற்றுறுதி அற்றவர்களே சமாதானத்தை எதிர்க்கின்றனர்

## சமாதான உதவிக்குழு உறுப்பினர் சுனிலா

(கொழும்பு)

வடபகுதி மக்கள் தெற்கிற்கும்



தென்பகுதி மக்கள் வடக்கிற்கும் சுதந திரமாகச் சென்றுவரக்கூடிய சூழ்நிலை யை பிரதமர் ரணில், புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆகியோர் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலமாக ஏற்படுத்தியுள்ளது.

இது யுத்தத்தின் கொடூரங்களை தென்பகுதி மக்கள் கண்டுணர வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இதன்பின்னரும் சமாதானத்தை எதிர்ப்பவர்கள் தாய்நாட்டின் மீது பற்றுறுதி அற்றவர்களாகவே காணப் படுகின்றனர். இவர்களைப்பற்றி எவரும் கவலைப்படத் தேவை யில்லை.

சமாதானத்தின் மீது மிகுந்த நம் பிக்கை கொண்டவரும் சமாதான உதவிக்குழுவின் உறுப்பினருமான சுனிலா அபேசேகர இவ்வாறு தெரி வித்துள்ளார்.

அவர் மேலும் சமாதானம் குறித்து கருத்து வெளியிடுகையில்,

இந்த நாட்டில் புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையில் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயகா குமாரதுங்கவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஒருமித்து குரல் கொடுத்து வருகின்றனர்.

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் இரு தரப்பும் சமஷ்டி முறையிலான அதி காரப் பகிர்வை ஆதரிக்கக் கூடிய நிலையில் இருப்பதால், சமாதானத் தை நோக்கிய இலக்கை அடையும் வாய்ப்புக்கள் உள்ளன.

இரு தசாப்த காலமாக நிலவிய கொடிய யுத்தத்திற்கு முற்றுப்புள்ளி வைத்திருப்பதன் மூலம் பெரும் எண்ணிக்கையான மனித உயிர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

யுத்த காலத்தில் ஏற்படுத்தப் பட்ட வீதித்தடைகள் அகற்றப்பட்டு, வடக்கு-கிழக்கு மட்டுமன்றி தென் பகுதியில் உள்ள மக்களும் நாட்டின எப்பகுதிக்கும் சுதந்திரமாகச் சென்றுவரும் சூழல் ஏற்பட்டுள் ளது.

நீண்டகாலமாக சந்தித்துக் கொள்ள முடியாத மக்கள், இன்று நேரடியாக சந்தித்துப் பேச முடி கிறது.

கடந்த காலங்களில் அவர்கள் முகம் கொடுத்த பல்வேறு பிணக் குகள் தொடர்பாகவும் தாங்கள் பெற்ற அனுபவங்களை பகிர்ந்து கொள்ள வும் மக்களுக்கு வாய்ப்புக் கிடைத் துள்ளது.

தமிழ் மக்களின்பிரச்சினைக்கு 1999-2000 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் யுத்தத்தின் மூலம் தீர்வுகாண சிலர் முயன்றனர்.

அன்று யுத்தத்தின் மூலமாக உழைத்தவர்கள் பலர் எனினும் இந்த நாட்டில் வாழ்கின்ற பெரும் பான்மையான மக்கள் சமாதானத் தையே விரும்புகின்றனர்.

யுத்தத்தினால் இலங்கை அரசு வடக்கு-கிழக்கு மக்களிடம் இருந்து தொலைவுக்குச் சென்றது.

அப்போது, அவர்களுக்கு உதவியாக இருந்தது விடுதலைப புலிகள் அமைப்பு மட்டுமே என்று தெரிவித்தார். (உ)

## விளையாட்டுப் போட்டி

(சண்டிலிப்பாய்)

யா/கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை பி.ப 1.30 மணிக்கு அதிபர் சு.சிவபாதரத்தினத் தின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தின ராக தெல்லிப்பழைக் கோட்ட முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆ. வ. கணேசலிங்கமும், சிறப்புவிருந் தினர்களாக தெல்லிப்பழைக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் த. சந்திர பாலன், தெல்லிப்பழை பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்தலைவர் சி. சிவமகா ராஜா ஆகியோரும் கௌரவ விருந்தின ராக யாழ். மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் நா. இலக்கியனும்கலந்து கொள்ளவுள்ளனர். (உ-258)

# ஐ.தே.க. அரசை வீழ்த்தலாம் என்று பொ.ஐ.மு. பகற்கனவு காணுகிறது

## றிச்சாட் பத்திரன பரிகாசம்

(கொழும்பு)

முன்னாள் கல்வி அமைச்சரும், காலி மாவட்டத்தின் பொதுஜன ஐக்கிய முன்னணியின் அமைப்பாளரு மான றிச்சாட் பத்திரன எம்.பி தான் தெனமாகாண சபையின முதலமைச்சா் பதவிக்கு ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளார்.

கடந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் அரசாங்கத்தரப் பின் பிரதம கொரடாவாகவும் பதவி வகித்த பத்திரன, பொது நிர்வாக அமைச்சரான வஜிர அபயவர்த்தன வன் இல்லத்தில் இடம்பெற்ற பொதுமக் கள் சந்திப்பில் இவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.

ஜே.வி.பி யின் உதவியுடன் அரசாங்கத்தை வீழ்த்தமுடியும் என்று பொதுஜன ஐக்கிய முன்னணி கூறி வருகின்றதாயினும், அது ஒரு பகற்கனவே என்று மேலும் தெரிவித்த பத்திரன தனது காலஞ்சென்ற தந்தையார் உயிர்பெற்று வந்து கேட்டுக் கொண்டாலும்கூடதான் அரசை ஆதரிப் பதை கைவிடப்போவ தில்லை என்று உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களின் குழுவில் இதுவரை காலமும் அங்கம் வகித்து வந்த பத்திரன கடந்தவாரமே அதிலிருந்து இராஜினாமா செய்து அனுரா பண்டாரநாயக்கவுக்கு இடமளித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (உ)

## உல்லாசப் பயணிகள் நலன் கருதி உள்ளூர் விமான சேவைகள்

(கொழும்பு)

உள்நாட்டு விமான நிலையங்கள் அனைத்தையும் அபிவிருத்தி செய்து கட்டு நாயக்கா விமான நிலையத்துடன் இணைக்க வேண்டும்.

அவ்வாறு இணைப்பதன் மூலம் உல்லாசப் பயணிகள் வருகை மேலும் அதிகரிக்கும் என லயன் எயார் நிறுவனத்தின் தலைவர் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துவெளியிடுகையில்,

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையினையடுத்து இலங் கைக்கு பெருமளவு உல்லாசப் பயணி கள் வர ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் இயற்கை வனப்புமிக்க பிரதேசங்களுக்கும், புராதன இடங் களுக்கும் வாகனமூலமே செல்கின் றார்கள்.

எனவே தூர இடங்களுக்கு விமான சேவைகளை நடத்துவதன் மூலம் நேரத்தை மீதப் படுத்துவதுடன், எதுவித சிரமமுமின்றி பயணிகள் தமது பயணத்தை மேற்கொள்ளலாம் என்றார். (உ-10)

## ஒரு நாளில் மட்டும் 02 இலட்சம் ரூபா பெறுமதியான மீன்கள் பிடிக்கப்பட்டன

## குருநகர் மீனவர் சாதனை

(குருநகர்)

குருநகர் மீன்பிடித் தொழிலாளி ஒருவரின் இயந்திரப் படகில் சென்ற வர்கள் ரூபா இரண்டு லட்சத்துக் கும் அதிக பெறுமதி உடைய மீன் களைப் பிடித்துள்ளனர்.

இந்நிகழ்வு கடந்த வெள்ளிக் கிழமை அன்று இரவு நடைபெற் றுள்ளது.

ஆழ்கடலில் மீன்பிடிக்கப்படும் நைலோன் வலைத் தொழிலாளி ஒருவரின் இயந்திரப்படகிலேயே மேற்படி பெறுமதிவாய்ந்த மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன.

குடாநாட்டின் கடல் வலயத் தடைச் சட்டம் நீக்கப்பட்டதை தொடர் ந்து, மீனவர்கள் பலரும் ஆழ்கடல் தொழிலில் ஈடுபட்டு வருவது குறிப் பிடத்தக்கது. (க-08-74)

## திருவள்ளுவர் தினவிழா

(ஏழாலை)

அகி இலங்கைத் திருவள்ளுவர் மகாசபை நடாத்தும் திருவள்ளுவர் தின விழா எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு சுன்னாகம் றோ.க.த.க. பாடசாலையில் செ. சொலமன் தலமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருத்தின ராக வலிவடக்கு பிரதெச செயலர் கா. பீதாம்பரம் கலந்துகொள்ள வுள்ளார். (உ-206)

## கல்வியை இடைநிறுத்திய மாணவர்கள் கற்க வசதி

(கொழும்பு)

பாடசாலை செல்லாது கல்வியை இடைநிறுத்திய மாணவர்களை மீண்டும் பாடசாலையில் சேர்க்க வடக்கு-கிழக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சு, மாகாண கல்வித் திணைக்களம், யுனிசெவ் நிறுவனம் ஆகியன இணைந்து நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

இந்த நடவடிக்கைகளுக்காக மாகாண கல்வியமைச்சு, மாகாண கல்வித்திணைக்களம் ஆகியன 29 இலட்சம் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளன.

இது தொடர்பான கருத்தரங்கு மார்ச் மாதம் 2ம், 3ம் திகதிகளில திருகோ ணமலையிலுள்ள மாகாண கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளது.

வடக்கு -கிழக்கில் உள்ள 24 கல்வி வலயங்களைச் சேர்ந்த முறை சாராக கல்விக்கான உதவிக் கல்விப பணிப்பாளர்கள் இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-3)

## சேமநல நலன்புரித் திட்டங்கள் அறிமுகம்

(சுதுமலை)

இலங்கையில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் வறுமைக்கோட் டிற்கு கீழ் வாழும் குடும்பங்களிற்கு சேமநல நலன்புரித்திட்டங்கள் இவ்வருடம் முதல் அறிமுகப்படுத்தப் படவுள்ளதாக கொள்கை அபிவிருத்தி செயற்படுத்துகை அமைச்சு அறிவித் துள்ளது.

இவ் விடயம் தொடர்பாக எல்லாப் பிரதேச செயலர்களிற்கும் நீதி அமைச்சின் செயலாளர் ஜே.சரித்தரத்த ரத்வத்தை கையொப்ப மிட்டு சுற்றறிக்கை ஒன்றை கடந்த வாரம் அனுப்பிவைத்துள்ளார்.

கிராமசேவையாளர் பிரிவு ரீதியாக தெரிவு செய்யப்பட்ட வறுமை நிலையில் உள்ளகுடும்பங்களிற்கு 2002ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க சேமநல நன்மைகள் 24ஆம பிரிவின் கீழ் உள்ள சட்டத்திற்கு அமைவாக விண்ணப்பங்கள் வழங்கப்பட வுள்ளதாகவும் இத்திட்டம் தொடர்பான நடவடிக்கைகளிற்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளையும் பெற்றுக் கொள்ள இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நடவடிக்கையின் முதற்கட்ட மாக அவ் வப்பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் விபரங்களை மிக விரைவில் தனது அமைச்சிற்கு அனுப்பிவைக்குமாறு, சகல பிரதேச செயலர்களிற்கும் அச் சுற்றறிக்கை யில்அறிவுறுத்தப்பட்டுள்ளது. (உ-252)

## தமிழ்ச் சிறுமி படுகொலை

## இலங்கையர் இருவருக்கு பிரான்சில் கடூழியச் சிறை

(பாரிஸ்)

பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் புறநகர் பகுதியான குசன்வில் நகரில் கடந்த 1999 ஆம் ஆண்டு இடம் பெற்ற பாலியல் வல்லுறவுக்குட் படுத்திய சிறுமியை படுகொலை செய்த சம்பவம் தொடர்பில் இரு இலங்கைத் தமிழருக்கு கடுழியச சிறைததண் டனை விதிக்கபட்டுளளது.

இச்சம்பவத்தில் சந்தேக நபர்களாக கைது செய்யப்பட்ட முதலாவது குற்றவாளியான தே.பேட்சன் என்பவருக்குக் கழிவுகள் அற்ற 22 வருட கடூழியச் சிறைத்தண்டனை யும் இரண்டாவது குற்றவாளியான தி. தியாகரூபன் என்பவருக்குக் கழிவுகள அற்ற 20 வருட கடூழியச் சிறைத்தண் டனையும் விதிக்கப்பட்டது.

ஸ்ரீ நிதர்சினி (11 வயது) என்பவரே வல்லுறவுக்கு உட்படுத திக்கொலை செய்யப்பட்டவர் ஆவார்.

இத்தீர்பை 12 நீதிபதிகளைக் கொண்ட நீதிச்சபையின் தலைமை நீதிபதி கடந்த செவ்வாயன்று நள்ளிர வில் வழங்கியுள்ளார். (உ)


இளங்கலைஞர் மன்ற வருடாந்த இசை விழா 2003

இடம் : மன்றக் கலாமண்டபம்

காலம் : 14.02.2003 - 23.02.2003 வரை

நிகழ்ச்சி நிரல

இன்று (19.02.2003) புதன்கிழமை 6ஆம் நாள்

மாலை 4.00 மணி முதல் 5.00மணி வரை

மங்கள இசை

ஈழ நல்லூர் பி. எஸ். பிச்சையப்பாகுழுவினர்

மங்கள விளக்கேற்றல்

வைத்தியகலாநிதி ஆர். கணேசமூர்த்தி

மாலை 5.00 மணி முதல் 5.45 மணி வரை

வயலின் இசை

பாட்டு : யசோதாஸ்ரீகுமார் வயலின் : கே. வனஜா

மிருதங்கம் : என். மாதவன் முகர்சிங் : என். சதீஸ்

மாலை 5.45 மணி முதல் 6.30 மணி வரை

வயலின் : கே. பத்மநாதன் மிருதங்கம் : பி. சியாம்கிருஷ்ணா

கெஞ்சிரா : கே. நந்தகுமார் முகர்சிங் : என். சதீஸ்

இரவு 6.30 மணி முதல் 7.30 மணி வரை

இசைக்கச்சேரி

பாட்டு : பொன்ஸ்ரீ. வாமதேவன் வயலின் : எஸ். கோபிதாஸ்

மிருதங்கம் : எஸ். துரைராசா கெஞ்சிரா : கே. அனந! தகோபன்

முகர்சிங் : வி. றமணன்

இரவு 7.30 மணி முதல் 8.30 மணி வரை

நாட்டியக்கலைமணி செல்வி. அகல்யாசுந்தரம் அவர்களின் மாணவிகள் வழங்கும்

நாட்டியாஞ்சலி

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

சட்டநாதர் வீதி நல்லூர். (C/5761) மன்றத்தினர்

# அரசு ஆயுதங்களை வாங்கிக் குவிக்கும் போது புலிகள் கொள்வனவு செய்வதில் தவறில்லை

## கஜேந்திரகுமார் எம்.பி. கருத்து

(பருத்தித்துறை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதபலமே தமிழ் மக்களின் பலமாகும். ஸ்ரீலங்கா அரசு ஆயுதங்கள் வாங்கிக் குவிக்கும் போது தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கொள்வனவு செய்வது தவறாகாது.

மேற்கண்டவாறு யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பருத்தித்துறை சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய நூல்கள் கையளிப்பு விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இச்சனசமூக நிலையத்திற்கு நூல்கள் கொள்வனவு செய்வதற்கென பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் 25 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்திருந்தார்.

இந்நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நூல்கள் கையளிப்பு விழாவிலே தொடர்ந்தும் உரையாற்றிய கஜேந்திரகுமார்,

தமிழினம் இன்று பல்வேறு இன்னல்களுக்குட்பட்டு அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றது. இந்நிலை மாறவேண்டும் என்பதே அனைவரதும் ஆவலாகும்.

இன்றைய சமாதானம் நீடிக்க வேண்டும். நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும். அப்போது தான் தமிழினத்திற்கு விமோசனம் கிட்டும். தமிழர் தலைநிமிர்ந்து வாழ முடியும். இதற்கு சகலரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டார். (உ-52)

# அகில உலக இந்து மாநில மாநாடு

# செப்ரெம்பரில் யாழில் நடக்கும்

(கொழும்பு)

அகில உலக இந்து மாநாடு தொடர்பாக யாழ். மாவட்ட பிராந்தியக் குழு நடத்தும் மாநில மாநாடு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9,10,11 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடாத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

3 பிரிவுகளாக இம்மாநில மாநாடு இடம்பெறவுள்ளது.

முதலாவது நாள் திருமுறை மாநாடும், இரண்டாவது நாள் இந்து இளைஞர் மாநாடும், மூன்றாம் நாள் இந்து மகளிர் மாநாடும் இடம்பெறவுள்ளது.

முதலாவது நாள் நிகழ்வு நல்லூர் திருஞான சம்பந்தர் மண்டபத்திலும், இரண்டாவது மூன்றாவது நாள் நிகழ்வுகள் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கிலும் நடைபெறவுள்ளதாக இந்து சமய கலாசார விவகாரங்கள் அமைச்சு யாழ். அலுவலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, அகில உலக இந்து மாநாடு எதிர்வரும் மேமாதம் 2ஆம் திகதி தொடக்கம் 5ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-7)

# ஒருமைப்பாட்டைப் பேணும் வகையில் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு

## இதுவே இந்தியாவின் விருப்பம்-கலாம் விளக்கம்

(புதுடில்லி)

இலங்கை அரசிற்கும்- தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தற்போது நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றிபெற வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பம்.

இவ்வாறு இந்தியப் பாராளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற வரவு-செலவுத் திட்டம் மீதான ஆரம்ப உரையில் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையில் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் சுமுகமான உறவுகள் நிலவி வருகின்றன.

இந்நிலையில் இலங்கையில் வாழும் சகல மக்களினதும் உரிமைகளையும் அபிலாசைகளையும் பேணக்கூடிய வகையில் இலங்கை ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தும் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே எமது விருப்பமும், நிலைப்பாடும் ஆகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளில் பங்காளராக அன்றி இந்தியா வெறும் பார்வையாளராக மட்டுமே இருந்து வருவதும்,



கலாம் இப்படியான ஒரு கருத்தை முதல் தடவையாக கூறியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

# தூக்குத் தண்டனை அமுலுக்கு வந்தால் குற்றச் செயல்கள் குறைந்து விடும்

## உள்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸ் துறையில் இனிமேல் அரசியல் தலையீடு கிடையாது. சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு இயங்கத் தொடங்கியிருப்பதால் இத்துறை சுதந்திரமாக இயங்கும் என உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்த ராஜா தலைமையில் நடைபெற்ற பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் பாடநெறியைத் தொடக்கிவைக்கும் வைபவத்திலேயே மேற்படி உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் எம்பி ஒருவர் பொலிஸ் துறையில் தலையிட்டதை அறிவேன். இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் இடம் பெறாது. கடந்த காலங்களில் பொலிஸாருக்கு சிறந்த பயிற்சிகள் வழங்கப்படவில்லை. இந்நிலை இனிமேல் தொடராது.

தூக்குத் தண்டனை அமுலுக்கு வரும்போது 90 சதவீதமான குற்றச் செயல்கள் குறைந்துவிடும். இத்தண்டனையை அமுலுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். (உ-3)

# செய்தித்துளிகள்

### விளையாட்டுப் போட்டி

(தென்மராட்சி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

நிகழ்வில், தென்மராட்சி பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகவும், நெல்லியடி மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் சி.சிற்றம்பலம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-77)

### எரிபொருள் இறக்கப்பட்டது

(கொழும்பு)

யாழ். மாவட்டத்திற்கான எரிபொருட்களை ஏற்றிவந்த எல.எம்.எஸ். றங்கொட என்ற கப்பல் பொருட்களை இறக்கிவிட்டு கடந்த சனிக்கிழமை மாலை கொழும்பு திரும்பியுள்ளது.

சீனக்குடா பெற்றோலிய கூட்டுத்தாபன ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக மேற்படி கூட்டுத்தாபனத் துறைமுகத்தில் தரித்து நின்ற இக்கப்பல் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தெளபீக்கின் தலையீட்டினால் பொருட்களை இறக்கிவிட்டு கொழும்பிற்கு சென்றுள்ளது. (உ-10)

### யாழ். பிரதேச சம்மேளனம் தெரிவு

(ஈச்சமோட்டை)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்ப்பாண பிரதேச சம்மேளனத் தெரிவு இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள் அ.சக்திவேல், திருமதி ஸ்ரீமேனன் ஆகியோரின் தலைமையில் கடந்த வாரம் இடம்பெற்றது.

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இத்தெரிவில் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கழகங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். தலைவராக து.அஜித்குமார் தெரிவு செய்யப்பட்டார். (உ-59)

### எழுத்துப் பரீட்சை

(சுதுமலை)

சுகாதார சேவைகள் திணைக்களம் சுகாதார அமைச்சு என்பவற்றின் கீழ் கடமை புரியும் குடும்ப நல சேவை உத்தியோகத்தர்களில் தரம் 2 'அ' இல் உள்ளவர்களிற்கு வகுப்பு 1 இற்கான வினைத்திறமை காண் தடைப்பரீட்சையின் எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலையில் உள்ள தாதியர் பயிற்சிப் பாடசாலையில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் அனுமதி அட்டைகளும் பாடவிபரங்களும் தனித்தனியே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யாழ். குடாநாட்டில் 15 பேர் வரையில் இப்பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். (உ-252)

### பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவிற்கு யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (உ-52)

### பழைய மாணவர்கள் நிதியுதவி

(பருத்தித்துறை)

புலோலி வேலாயுதம் மகாவித்தியாலய அபிவிருத்திக்கென பழைய மாணவர்கள் 45 ஆயிரம் ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

வெளிநாட்டில் வதியும் எஸ்.அருளானந்தம் 25 ஆயிரம் ரூபாவையும், கொழும்பு வர்த்தகர் ரீ.தர்மகுலசிங்கம் 20 ஆயிரம் ரூபாவையும், வித்தியாலய பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளைத்தலைவர் வீ.எஸ்.ஏகாம்பரநாதனிடம் கையளித்துள்ளனர். (உ-52)

### பழைய மாணவர்சங்கம் அங்குரார்ப்பணம

(பருத்தித்துறை)

புலோலி வேலாயுதம் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. (உ-52)

### சிரமதானம்

(தனங்கிளப்பு)

தென்மராட்சி பிரதேச செயலக கைதடி நாவற்குழி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரிவு சமுர்த்திச் சிறு குழு அங்கத்தவர்களினால் அண்மையில் கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை விளையாட்டு மைதானம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. (உ-37)

### திருநிலைப்படுத்தல்

(மண்கும்பான்)

கிளாலியைப் பிறப்பிடமாகவும், பண்டத்தரிப்பு சில்லாலையை வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரன் மரியதாஸ் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் திருவுளச் சபையின் குருவாக நேற்று திருநிலைப்படுத்தப்பட்டார். (உ-55)

### இசை விழாவில் இன்று

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றத்தின் வருடாந்த இசைவிழாவின் 6ஆம் நாளான இன்று மாலை யசோதா ஸ்ரீகுமார், கே.பத்மநாதன் ஆகியோரின் வயலின் இசைக் கச்சேரிகளும் பொன்.ஸ்ரீ.வாமதேவனின் பாட்டுக்கச்சேரியும் நாட்டிய கலைமணி செல்வி அகல்யா சுந்தரத்தின் மாணவிகள் வழங்கும் நாட்டியாஞ்சலி நிகழ்வும் நடைபெறவுள்ளது. (உ-10)



அண்மையில் வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஓடியோ, வீடியோ, கணனிப் பகுதியினை ஓய்வு பெற்ற அதிபர் கு.கனேசலிங்கம் திறந்து வைக்கின்றார்.
படம்: கொக்குவில் நிருபர்.



கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி கலைவிழாவை அதிபர் வி.சிவசிதம்பரம் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார். அருகில் பிரதம விருந்தினரான கரவெட்டிப் பங்குத் தந்தை அருட்திரு. அருள்ஞானராஜா அடிகளாரும் காணப்படுகிறார்.
படம்: பருத்தித்துறை நிருபர்



சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் அதிபர் திருமதி அருந்தவச் செல்வி வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் திரு உருவப்படத்திரை நீக்க விழாவை பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம தலைவர் சுவாமி சித்ரூபானந்தா மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார்.
படம்: பருத்தித்துறை நிருபர்

## இன்று ஒரு தகவல்

# அம்மாவா? அப்பாவா?

ஒரு சிறு பையன் வந்தான், அவனைப் பார்த்து ''ஏனப்பா... உங்கள் வீட்டில் அம்மா புத்திசாலியா? அப்பா புத்திசாலியா?'' என்று கேட்டேன். அவன் அலட்சியமாக என்னைப்பார்த்துச் சிரித்தான். ''என்னசார் இது... இந்தக் காலத்தில் இது கூடவா தெரியாமல் இருக்கிறீர்கள்?'' என்றான். ஒரு சின்னப்பையன் என்னைப்பார்த்து இப்படிக் கேட்டுவிட்டானே என்று நினைக்கிற பொழுது எனக்கு ஒரு மாதிரியாக ஆகிவிட்டது. அதற்குப் பிறகுதான் என்னுடைய தாத்தா சொன்ன ஒரு கதை எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. அது என்ன தெரியுமா?

ஓர் ஊரில் ஒரு அம்மாவும், பிள்ளையும் இருந்தார்கள். அந்த மகனுக்கு திடீர் என்று தேசாந்திரம் போய் வரவேண்டுமென்று ஆசை வந்து விட்டது. ஊர்ஊராகப் போய்ச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்கின்ற ஆசை. அந்த அம்மாவுக்கு இது பிடிக்கவில்லை... மகனைப் பிரிந்து இருப்பதற்கு அவரின் மனது இடம்கொடுக்கவில்லை. வேண்டாமப்பா! என்று சொல்லிப் பார்த்தார். அவன் கேட்கவில்லை. போயே தீருவேன் என்று ஒற்றைக்காலில் நின்றான். திடீரென்று புறப்பட்டும் விட்டான். சரி! இனி இவனைத் தடுக்க முடியாது என்று அந்த அம்மா முடிவு பண்ணிவிட்டார். இருந்தாலும் புத்திசாலித்தனமாக ஒருயோசனை பண்ணினார். மகனைக் கூப்பிட்டு அவனிடம், ''இதோ பாரப்பா... நீ தேசாந்திரம் போவதென்று தீர்மானம் பண்ணிவிட்டாய்! அதை நான் தடுக்கவில்லை. போய்வீட்டுவா! ஆனால் போவதற்கு முன் எனக்கு ஒரு வாக்குறுதி கொடுத்துவிட்டுப்போ' என்று சொன்னார்.

''போகின்ற பொழுது, இரவாக இருந்தாலும் சரி பகலாக இருந்தாலும் சரி - புளிய மரத்து நிழலிலேயே தங்கவேண்டும். திரும்பி வருகிற பொழுது இரவும், பகலும் நீ வேப்பமரத்து நிழலிலேயே தங்கவேண்டும்'' என்று சொன்னார். ''சரி... அப்படியே செய்கிறேன்'' என்று வாக்குறுதி கொடுத்துவிட்டுப் போனான் பையன்.

போகின்ற வழியில் புளிய மரத்து நிழலிலேயே தங்கினான். தூங்கினான். அப்படிப்போய்க் கொண்டேயிருந்தான். எழாவது நாள்... அவன் உடம்புக்குச் சுகமில்லாமல் போய்விட்டது. மிகவும் பலவீனமாக ஆகிவிட்டது. இனிமேல் நடக்க முடியாது என்கின்ற நிலைமை. யோசித்துப் பார்த்தான்... சரி, இதற்கு மேல் போக வேண்டியதில்லை என்று முடிவு பண்ணிக்கொண்டு திரும்பி வர ஆரம்பித்துவிட்டான். திரும்பி வருகின்ற பொழுது வழியில் வேப்பமரத்து நிழலிலேயே தூங்கித் தங்கித் தங்கி வந்தான். நாளுக்கு நாள் உடம்பு சரியாக ஆகிவிட்டது. ஏழாம் நள் வீட்டுக்கு வந்து சேர்கின்ற பொழுது உடம்பு பழைய படியே கலகலப்பாக ஆகிவிட்டது. பூரண சுகம் அடைந்து விட்டான்.

தேசாந்திரம் போன பையன் திரும்பிவந்து விட்டானே என்று அந்த அம்மா ஆச்சரியப்படவில்லை. ஏனென்றால் அவருக்குத் தெரியும் இப்படி ஆகுமென்று. பையன் சீக்கிரமாக திரும்பி வரவேண்டும் என்பதற்காகத் தான் அவர் அந்த யோசனையைச் செய்தார். என்ன விஷயம் என்பதையும் அவரே சொன்னார். ''மகனே! புளிய மரத்து நிழல் உடம்புக்கு உஷ்ணத்தைக் கொடுக்கும். சீக்கை உண்டாக்கும். அதனால் நீ தொடர்ந்து புளியமரநிழலில் தங்கியதால் நோய்க்கு ஆளாகிவிட்டாய். அதனால் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பி வந்துவிட்டாய். திரும்பி வருகிற பொழுது நீ தங்கியது வேப்பமரநிழலில். அது உடம்புக்குக் குளிர்ச்சியைத் தரக்கூடியது. நோயைத் தீர்க்கக் கூடியது. அதனால் சுகமாக வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டாய்! உன்னுடைய தேசாந்திர பயணத்தைத் தடுப்பதற்குத் தான் இப்படிப் பண்ணினேன்'' என்று சொன்னார். அந்த அம்மா!

பார்த்தீர்களா அம்மாவினுடைய புத்திசாலித்தனத்தை? அப்பாவாக இருந்தால் இப்படியா செய்வார்? ஒரு அப்பா பையனிடம் 10ரூபா கொடுத்து ''இதை எடுத்துக் கொண்டு போய் அடுத்த ஊரிலிருக்கின்ற மாமாவிடம் கொடுத்துவிட்டு வா! வழியில் எங்கேயாவது மரத்தடியில் படுத்துத் தூங்கிவிடாதே'' என்று எச்சரிக்கை பண்ணி அனுப்பினார்.

பையனுக்கு எச்சரிக்கையாக வாழ்வது எப்படி என்பதைக் கற்றுக்கொடுப்பதற்காக இப்படிப்பண்ணினார். அவன் பணத்தை வாங்கிக்கொண்டு போனான். அப்பா சொன்னதை மறந்து ஒரு மரத்தடியில் படுத்துத் தூங்கிவிட்டான். அவனுக்குத் தெரியாமல் அவன் பின்னால் போன அப்பா, அவனது பையிலிருந்த அந்த 10ரூபாயை நைசாக எடுத்துக் கொண்டு திரும்பி வந்து விட்டார். பையன் விழித்துக் கொண்டதும் பையைத் தடவிப்பார்த்தான். பணத்தைக் காணவில்லை. அழுது கொண்டே திரும்பி வந்தான். அப்பாவிடம் விஷயத்தைச் சொன்னான்.

அப்பா சிரித்துக் கெண்டே ''அதற்குத் தானப்பா ஆரம்பத்திலேயே எச்சரிக்கை பண்ணினேன்! இனிமேலாவது நீ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் இப்படிப் பண்ணினேன் அந்தப் பணம் எங்கேயும் போகவீல்ல. நான் தான் அதை உனக்குத் தெரியாமல் எடுத்து வைத்திருக்கின்றேன். இதோ பார் அது இருக்கின்றது, என்று சொல்லிக் கொண்டே சைட் பொக்கெட்டில் கையை விட்டார். அது ஓட்டையாக இருந்தது. அதை எவனோ கத்தரித்து எடுத்துக் கொண்டு போயிருக்கின்றான்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# உயர்பாதுகாப்பு வலயம் குறித்து

# இரண்டாம் அறிக்கை இவ்வாரம்

## நம்பியார் சமர்ப்பிப்பார்

(கொழும்பு)



யாழ். மாவட்ட அதி உயர் பாது காப்பு வலயம் குறித்து ஆராய்ந்த இரண்டாவது அறிக்கையை இந்திய இராணுவ முன்னாள் தளபதி நம்பியார் இவ்வாரம் அரசாங்கத்திடம் சமர்ப்பிப்பார், என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ் அறிக்கை தொடர்பாக அரசின் கருத்தும் ஜப்பானில் நடைபெறவுள்ள ஆறாம் கட்டப்பேச்சு வார்த்தையில் முன்வைக்கப்படும் எனவும்,

புலிகள் இயக்கத்தின் கருத்தும் இப் பேச்சுவார்த்தையின் பொது கோரப்படும் எனவும் பாதுகாப்பு அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நம்பியார் சமர்ப்பித்த முதல் அறிக்கைக்கும் இரண்டாம் அறிக்கைக்கும் இடையில் பாரிய வித்தியாசங்கள் இருக்காது என பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது இவ்விதமிருக்க, இந்திய முன்னாள் இராணுவத் தளபதி நம்பியார் வடக்கு கிழக்கிலுள்ள அதி உயர் பாதுகாப்பு வலயங்களை நேரில் சென்று பார்வையிட்டு இதனால் பொதுமக்கள் அனுபவித்து வரும் அல்லல்களை அறிந்தும் உள்ளது.

இவர் சமர்ப்பித்திருந்த முதல் அறிக்கைக்கு விடுதலைப்புலிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் மிகுந்த எதிர்ப்புக் கிளம்பியதும் குறிப்பிடத்தக்கது. (உ-3)

# அவசர தேவைகளை இனம் காணும்

# உயர்மட்ட மாநாடு நாளை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள், தேவைகளை இனங்காண்பதற்கான உயர் மட்ட மாநாடு நாளை காலை 9.00மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் உள்ள சிரான் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி நடவடிக்கைகள் குறித்து, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் முகவர் நிறுவனங்களான யு.என்.டி.பி, யு.என்.எச்.சி.ஆர். ஆகியன ஆராய்ந்து வருகின்றன.

இம்மாநாட்டில் வடக்கு கிழக்கு மாகாணசபை பிரதம செயலாளர் ரங்கநாதன், மகாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், வடக்கு - கிழக்கு மாகாண மாவட்ட அரச அதிபர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிரானின் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் வடக்கு - கிழக்கு மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு தொடர்பான அடுத்த கூட்டம் எதிர்வரும் 27ஆம், 28ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறவுள்ளது. (உ-3)

# அகண்ட நாம பஜனை

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அமைச்சின் ஆதரவில் எதிர்வரும் மார்ச்மாதம் முதலாம்திகதி திருநெல்வேலியில் அமைந்துள்ள சிவன் கோயிலில் காலை 6மணிமுதல் மாலை 6மணி வரை அகண்டநாம பஜனை நடைபெறவுள்ளது. (உ-7)

# இராசி பலன்

## 19.02.2003

### (மாசி 07, புதன்)

| | |
|---|---|
| திருதியை | பி.இ 12.41வரை |
| உத்தரம் | மு.இ 7.54வரை |
| இராகுகாலம் | 12.32 - 2.02 |
| சுபநேரம் | 5.02 - 6.32 |

**அமிர்தசித்தம்**

**திருவள்ளுவர் குருபூசை**

**மேடம்**
காரிய அனுகூலம், செய்தொழில் விருத்தி, தேகநலன், பகைவர் நேசம்.

**இடபம்**
காரிய இடையூறு, கௌரவக் குறைவு, குடும்பக்கவலை, திருப்பம்.

**மிதுனம்**
கல்வியில் ஆர்வம், வாக்குமேன்மை, உடல்சோர்வு, சகோதரர் உதவி.

**கடகம்**
நல்லசம்பவம், புதியபொருள் சேர்க்கை, காரிய அனுகூலம், பிறர் உதவி.

**சிங்கம்**
பெண்கள் உதவி, பொருள் விரையம், முயற்சி தாமதம், விவாதம்.

**கன்னி**
நல்ல உணவு கிடைத்தல்,செய்தொழில் முன்னேற்றம், சிந்தனை மிகுதி, முயற்சிபலிதம்.

**துலாம்**
அமைதிக்குறைவு, சுபசெலவு, முயற்சி தாமதம், போசனசுகம்.

**விருச்சிகம்**
எடுத்த கருமம் கைகூடும், தெய்வசிந்தை, பெருமை, பொருள் சேர்க்கை.

**தனுசு**
சுபநிகழ்வு, உடற்சுகம், கீழ்ப்படிவு, தொழில் விருத்தி.

**மகரம்**
தொழிலில் புதிய மாற்றம், ஆன்றோர் மதிப்பு, முயற்சி தாமதம், வீண்பயம்.

**கும்பம்**
வாகன பயம், நண்பர்கள் வெறுப்பு, காரிய தாமதம், உடல்நலக்குறைவு.

**மீனம்**
திடீர் பயணம், குடும்ப சுகம், கௌரவம், காரிய அனுகூலம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# இரண்டாவது தடவையாகவும்

# போ:ர்ஸ்ரார் சம்பியனானது

(மண்கும்பான்)

யாழ். பிரதேசசெயலகப்பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட 25கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் யாழ்.பிரதேச செயலக விளையாட்டு அதிகாரி எஸ்.திருமாறன் தலைமையில் நடைபெற்றன.

இப்போட்டியில்பிரதமவிருந்தினராக யாழ். பிரதேச செயலர் செந்தில் நந்தனன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஜே.எவ்ஜே ரூபசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப்போட்டிகளில் போ:.ர்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் இம்முறையும் சம்பியனாகியது.

68புள்ளிகளைப் பெற்று போ:.ர்ஸ்ரார் விளையாட்டுக் கழகமும், 50புள்ளிகளைப் பெற்று யுத்காமல் விளையாட்டுக் கழகமும் முறையே 1ஆம் மற்றும் 2ஆம் இடங்களைப் பெற்றன.

போ:.ர்ஸ்ரார் விளையாட்டுக் கழகம்கடந்த ஆண்டு சம்பியனாகியமை குறிப்பிடத்தக்கது. (உ-55)

# பெற்றோலியக் கூட்டுத்தாபன

# ஊழியர்கள் வேலை நிறுத்தம்

(திருகோணமலை)

திருகோணமலையின் எண்ணெய்க் குதங்களை இந்திய எண்ணெய் நிறுவனமாக ஐ.ஓ.சி வெள்ளிக்கிழமை பொறுப்பேற்றதுமே இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் 400பேர் திடீர் வேலை நிறுத்தத்தில் குதித்ததையடுத்து, 100வரையிலான எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் செயலற்றுப் போனதுடன் திடீரென எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டு எரிபொருள் கள்ளச்சந்தையில் 100ரூபா வரை விற்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திய எண்ணெய் நிறுவனம் எண்ணெய்க் குதங்களை பொறுப்பேற்பதுபற்றி தமக்கு ஆட்சேபனையில்லை எனத் தெரிவித்தஊழியர் தரப்புப் பேச்சாளர், ஊழியர்களுக்கு தொழில் பாதுகாப்பு மற்றும் இதுவரை காலமும் இருந்து வந்த வசதிகள் என்பனவற்றிற்கு உத்தரவாதம் வேண்டும் என்று கோரினார்.

இதனை உறுதி செய்யும் வரையில் தாம் வேலைநிறுத்தத்தைத் தொடரவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வெள்ளியன்று சீனன்குடாவிலுள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளரை வெளியேறுமாறும். இந்திய எண்ணெய் நிறுவனத்தின் பொது முகாமையாளரை அலுவலகத்தினுள் அனுமதிக்குமாறும் கோரிக்கை விடப்பட்டதைத் தொடர்ந்தே மேற்படி ஊழியர் வேலை நிறுத்தம் ஆரம்பமானது.

பெற்ரோலியக் கூட்டுத்தாபன நிர்வாகத்துடன் சந்திப்பொன்றைக் கோரியுள்ள ஊழியர்கள், இப்போது தமக்கு வழங்கப்பட்டு வரும் சலுகைகள் தொடர்ந்து வழங்கப்படுவதை உறுதி செய்யும் ஒப்பந்தமொன்று ஐ.ஓ.சீ நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

தமக்குப் புதிதாக நியமனக் கடிதங்கள் வழங்கப்படவேண்டு மென்றும் அவர்கள் கோரியுள்ளனர். இதேவேளை, வேலை நிறுத்தம் தொடருமாயின் குருநாகல், கொழும்பு ஆகிய இடங்களிலிருந்து எரிபொருள் தருவிக்கப்படும் என்று திருகோண மலை அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (உ)

# கண்ணிவெடி அகற்றும்

# பணியில் மேலும் 320பேர்

(வவுனியா)

கண்ணிவெடி அகற்றும் பணியில் எதிர்வரும் நான்கு மாதங்களில் மேலும் 320பேர் சர்வதேச மிதிவெடி அகற்றும் பயிற்சியினைப் பெற்று பணிகளை மேற்கொள்ளவுள்ளதாக மனிதநேய கண்ணிவெடிகளை அகற்றும் பணிப்பாளர் பரணிதரன் தெரிவித்துள்ளார்.

மனித நேய சர்வதேச மிதிவெடிகளை அகற்றும் பயிற்சியினைப் பெற்ற 80பேர் தமது பயிற்சிகளை முடித்து வெளியேறியுள்ளனர்.

பயிற்சியைப் பெற்று வெளியேறிய அணி வடமராட்சி கிழக்கில் கண்ணி வெடிகளை அகற்றும் பணியில் ஈடுபடவுள்ளது.

இதற்கான நிதி சர்வதேச அமைப்பு ஒன்றின் மூலம் கிடைக்கவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(உ-3)

சிறப்பு ஈனும் செல்வம் பெறினும்
பிறர்க்கு இன்னா
செய்யாமை மாசற்றார் கோள் — குறள்

# வலம்புரி

## ஏன் இந்தத் தடைவிதிப்பு!

இராணுவச் சீருடையிலான இடுப்புப்பட்டியை அணிவதைத் தவிர்க்குமாறு கண்காணிப்புக் குழு இடைக்கால ஒழுங்கு விதி ஒன்றை பிறப்பித்துள்ளது. இவ்இடைக்கால ஒழுங்கு விதி முறைக்கு அரசும் விடுதலைப புலிகளும்இணக்கம் தெரிவித் திருந்தாலும் இடுப்புப்பட்டியை எமது தாயகத்தில் விடுதலைப் புலிகள் அணிந்தால் என்ன? ஆனால் எவ்வகையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் பாதிக்கும் போன்ற கேள்விகள் ஒவ்வொரு தமிழ் மக்களிடமும் எழவே செய்கிறது.

அதில் நியாயமும் உண்டு. தமிழ் மக்கள் தமது தாயகத் தில் உரிமையோடு வாழ்வதற்கு எவரும் தடையிட முடியாது. அத்தோடு தமிழ் மக்களையும் விடுதலைப்புலிகளையும் வேறாக நோக்கினால் அதை விடப்பெரும் தவறு வேறு ஏதுவு மாக இருக்க முடியாது.

எனவே தமிழர் தாயகத்தில விடுதலைப்புலிகளுக்கு விதிக் கப்படுகின்ற எந்தத்தடையும் தமிழ் மக்களுக்கு விதிக்கப் படுகின்ற தடையாகவே கருதப்படும்.

சாதாரண இராணுவச் சருடை யிலான இடுப்புப்பட்டியை விடுதலைப்புலிகள் அணிவதில் எந்தத் தவறும் இருக்கமுடியாது. ஆனால், விடுதலைப்புலிகள் இடுப்புப்பட்டி அணிவதை இரா ணுவத்தினர் விரும்பவில்லை என்பதே உண்மை.

இராணுவம் விரும்பவில்லை என்பதற்காக அதனைத தடை செய்ய வேண்டுமெனக் கருதுவது எதிர்காலத்திலும் இராணுவத்தி னரின விடாப்பிடித்தனங்க ளுக்கு வழிசமைப்பதாகவே இருக்கும். கண்காணிப்புக் குழுவின் இடைக்கால ஒழுங்கு முறைக்கு விடுதலைபுலிகள் இணங்கியிருப்பது சமாதானத் தின்பால் அவர்கள் கொண்டுள்ள விசுவாசத்தையும் நம்பிக்கையை யும் உணர்த்துவதாக உள்ளது இதனை சர்வதேச நாடுகள் உணர்ந்து கொள்ள வேண்டும் விடுதலைப்புலிகள் இடுப்புப் பட்டியோடு இராணுவக் கட்டுப் பாட்டு பகுதிக்குள் நுழைவது பெரியதொரு பிரச்சினையாக அரசுக்கும், இராணுவத்திற்கும இருக்குமாயின் தமிழர் தாயகத் தில் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயில்இராணுவம்தனது ஆக்கிரமிப்புக்குள் வைத் திருக்கும பிரதேசங்களில் இருக்கும் தமிழ் மக்கள் எத்துணை பிரச்சினைகளை எதிர்நோக்குவார்கள் என்பதை கண்காணிப்புக்குழுவோ அன்றி அரசுக்கு ஆலோசனை வழங்கும் நாடுகளோ சிந்திக்காமல இருப்பது வேதனைக்குரியது. தமிழர்களுக்கு ஒரு நியாயம், சிங்கள ஆட்சியாளர்களுக்கு ஒரு நியாயம் என்ற நிலைப்பாடு சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு கொடுப்போரிடம் இருக்குமாயின் அஃது நிரந் தரமான சமாதானத்தை ஏற்படுத்த உதவாது.

ஏனெனில், இலங்கையில் கடந்த 20 வருடமாக நடைபெறு கின்ற யுத்தத்திற்கு அடிப் படைக்காரணம் சமத்துவத்தை - சமஉரிமையைப் பேணாமல் இன வேறுபாட்டின் அடிப் படையில் செயல்பட்டமையே ஆகும்.

எனவே சமாதான முயற்சிக்கு உதவுவோர் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க வேண்டும்.

## இலங்கைக்கு வழங்கும் உதவிகளை நிறுத்த
# பொது ஜன ஐக்கிய முன்னணி- ஜே.வி.பி உறுப்பினர்கள் பிறநாடுகளுக்குப் பறந்தனர்
## ஐ.தே.க. பொதுச் செயலர் தகவல்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி யினரும் ஜே.வி.பி.யினரும் மற்றும் சந்தர்ப்பவாதக் குழுக்களும் இணைந்து இலங்கைக்கு கிடைக்கும் வெளிநாட்டு உதவிகளை நிறுத்த முனைகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் சினாக் கப்புக்கொட்டுவ விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கைக்கு கிடைக்கும் வெளி நாட்டு உதவிகளை தடுத்து நிறுத்து வது குறித்த உடன்படிக்கை ஒன்றை ஜனாதிபதியுடன் ஏற்படுத்துவதில் ஜே.வி.பி.யினர் வெற்றி கண்டுள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி யினருக்கும், ஜே.வி.பி.யினருக்கும் இடையில் கூட்டணி உருவாக் குவது குறித்து அண்மையில் ஜனாதிபதி மாளிகையில்நடைபெற்ற நிகழ்விலேயே இவ் உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், பொதுஜன ஐக்கிய முன்னணியினரும் ஜே.வி.பி. யினரும் இலங்கைக்கு உதவிகளை வழங்க வேண்டாம் என வலியுறுத்துவதன் பொருட்டு வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் வெளிநாட்டு உதவி அமைப் புக்களின் உயர் அதிகாரிகளை சந்திக்க தற்போது வெளிநாடுகளிற்கு விஜயம் செய்துள்ளனர். இது தேசத் துரோக நடவடிக்கையாகும்.

வெளிநாட்டு உதவிகள் மூலம் மக்களின் பொருளாதாரம் வலுவடை வதுடன் மக்களின் வருமானமும் அதிகரிக்கும். இத்தகைய நற்பயன் களை தடுப்பதற்கே பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பி.யினரும் முனைகின்றனர் என்றுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயு தங்களைக் கைவிடும் வரை எந்த விதமான உதவிகளையும் வழங்க வேண்டாமென பொதுஜன ஐக்கிய முன்னணி ஜப்பான் விசேட தூதுவர் யசுசி அகாஷியிடம் கோரவுள்ள தாக கட்சியின் ஊடகப்பேச்சாளர் சரத் அமுனுகம அண்மையில் பத்திரிகை யாளர் மாநாடொன்றில் தெரிவித்திருந் தமையும் குறிப்பிடத்தக்கது.(உ-10)

# முஸ்லிம்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் உரிமை வேறு எவர்க்கும் கிடையாது
## ஹக்கீம் கடுமையான உரை

(கொழும்பு)

ஈராக்கின் தலைவிதியை நிர்ண யிக்கும் உரிமை அந்த நாட்டிற்கே உரியது. அது போன்று இலங்கை யில் வாழும் முஸ்லிம்களின் தலை விதியை நிர்ணயிக்கும் உரிமை முஸ்லிம் மக்களுக்கே உரியது.

கப்பல்துறை மற்றும் துறைமுக அபிவிருத்தி அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக் கும் வகையில் முஸ்லிம் ஐக்கிய முன்னணியினரால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே ஹக்கீம் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசுகையில்,


அந்தந்த நாட்டிற்குரிய தலைவிதி யையும், தலைவர்களையும் நியமிக்கும் உரிமை அந்தந்த நாட்டு மக்களிற்கே உரியது.

ஆப்கானிஸ்தானைப் போன்று ஒரு பொம்மைத் தலைவரை ஈராக்கில் நியமிக்க அமெரிக்கா முனைகிறது அவ்வாறு நியமிப்பதற்கு அமெரிக்கா விற்கு எந்த உரிமையும் இல்லை.

ஈராக்கில் யுத்தம் மூண்டால் அந்த நாட்டில் உள்ள 15 வயதிற்குட் பட்ட சிறுவர், சிறுமிகள் மற்றும் வயோதிபர்கள் பெரிதும் பாதிப்படை வார்கள்.

அத்துடன், இலங்கையின் பொருளா தாரமும் பாதிக்கப்படும்.

இக்கூட்டத்தில் முஸ்லிம் பிரமுகர் கள், பொதுஜனஐக்கிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஐக்கிய தேசிய முன்னணி ஆகிய வற்றின் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (உ-10)



## மாரப்பனவுக்கு எதிரான
# நம்பிக்கையில்லா பிரேரணை
## வாக்கெடுப்பில் ரத்வத்த

(கொழும்பு)



பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு எதிரான நம்பிக்கை யில்லாப் பிரேரணை மீதான வாக் கெடுப்பில் முன்னாள் பிரதிப்பாது காப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த கலந்து கொண்டார்.

உடத்தலவின்ன படுகொலை தொடர்பில் சந்தேக நபரான அனுருத்த ரத்தவத்த நேற்று கொழும்பு மேல் நீதிமன்றில் மேற்படி வழக்கு விசாரணைக்குச் சமுகமளித்திருந்த வேளை, அவர் சார்பான சட்டத் தரணி விடுத்த கோரிக்கைக்கு இணங்க இவ் அனுமதியை நீதிபதி வழங்கினார்.

இதேவேளை, அமைச்சர்களுக் கான பாதுகாப்பு ஏற்பாட்டுடன் ரத்த வத்த பாராளுமன்றத்திற்குச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்ற சட்டத் தரணியின் கோரிக்கை நிராகரிக் கப்பட்டு சிறைச்சாலை அதிகாரி களின் பாதுகாப்பிலேயே நீதிமன்றம் செல்ல ரத்தவத்த அனுமதிக்கப் பட்டார். (உ)

### கூட்டம்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் அறிவொளி சனசமூக நிலையத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமும் நடப்பாண்டு நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணிக்கு சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது. (உ-258)

## தினசரி தியானம்
### மருந்து

பேரின்ப மருத்துவர்களாம் முனிவர்களை நம்பிக் கையுடனும், பக்தியுடனும் பணிவுடனும் நாடிச் செல்லுங்கள். அறிவாகிய மருந்தில் ஒரு வேளைக் குரிய மருந்தை எடுத்துக் கொள்ளுங்கள். அப்போது அறியாமையாகிய நோய் முழுமையும் நீங்கும். எப்போதும் நிலைத்திருக்கும் அமைதியை நீங்கள் பெறலாம். பூமியைப் போல் பொறுமையாய் இருங்கள். வெற்றி அடைவீர்கள். மற்றவை தாமாக உங்களை வந்தடையும்.

சுவாமி சிவானந்தர்

## சட்டத்தரணி ஆசனத்தில்
# சாதாரண ஆடையில் அமர்ந்த ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே

(கொழும்பு)

சட்டத்தரணிகளுக்கான அங்கியை அணியாது நீதிமன்றத்தில் சட்டத் தரணி ஆசனத்தில் அமர்ந்திருந்த முன்னாள் அமைச்சரும் எதிர்க்கட்சி எம்.பியுமான ஜெயராஜ் பெர்னாண் டோபுள்ளே நீதிபதியின் எச்சரிக் கைக்கு ஆளாகினார்.

இதனையடுத்து அவர் நீதிபதி யிடம் மன்னிப்புக்கோரினார்.

நேற்றைய தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் உடத்தலவின்ன படுகொலை வழக்கு விசாரணையின் போது இச்சம்பவம் இடம்பெற்றது.

சாதாரண ஆடையுடன் மேல் நீதிமன்றத்தின் சட்டத்தரணிகளுக் கான ஆசனத்தில் அமர்ந்திருந்த ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயை நீதிபதி எச்சரித்து ஆசனத்தை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட் டதாகவும்,

இதனையடுத்து அவர் சட்டத்தரணி அங்கியை அணிந்த பின்னர் மீண்டும் வந்து அதே இடத்தில் அமர்ந்த தாகவும் தெரிவிக்கப்படுகிறது.(உ)

# நியாப் துரித மதிப்பீட்டு ஆய்வுக் குழு நியமிப்பு

(யாழ்ப்பாணம்)

நியாப் திட்ட துரித மதிப்பீட்டு ஆய்வுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

5 அங்கத்தவர்களைக் கொண்ட இக்குழு திட்டமிடல், திட்டம் செயற் படுத்தல் என்பவற்றை ஆய்வு செய்து அடிப்படைத் தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் ஒழுங்குபடுத்தும்.

இவ் ஆய்வுக் குழுவின் அறிக்கை இரு மாத காலத்திற்குள் ஒப்படைக்கப் படவிருப்பதால், நியாப் திட்டங்கள் தொடர்பான திட்ட நிறைவேற்று முகவர்களுடனான கலந்துரை யாடல் ஒன்று எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.செயல கத்தில் இடம்பெறவுள்ளது.(உ-4)

## கற்கோவளத்தில் அமைந்திருந்த
# பாரிய இராணுவ முகாம் வேறிடம் மாறியது

(பருத்தித்துறை)

கற்கோவளம் பகுதியில் நிலை கொண்டிருந்த படையினர் அப்பகுதியை விட்டு வெளியேறியுள்ளனர்.

கற்கோவளத்தில் இருந்த மேற்படி பாரிய இராணுவ முகாமைவிட்டு படையினர் வெளியேறியதைத் தொடர்ந்து, கடற்கரையோரமாக இருந்த மினி முகாமுடன் இப்படை யினரும் ஆயுத தளபாடங்களும் இணைக்கப்பட்டு அந்த முகாம் விரிவுபடுத்தப்படுகிறது.

இதேவேளை, கற்கோவளம் பகுதியில் படையினர் முகாமிட்டிருந்த பொது மக்கள் பலரின் வீடுகள், இப்பகுதிக் கிராம அலுவலர் முன்னிலையில் படை அதிகாரிகளால் உரியவர் களிடம் ஒப்படைக்கப்பட்டது.(உ-52)



தெற்காசிய மன்றக் கற்கை நெறிகள் மகா நாட்டை ஜனாதிபதி சந்திரிகா ஆரம்பித்து வைத்த காட்சி.

# ஏப்பிரல் மாதம் முதல் எழுதுநர்களுக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண இணைந்த சேவைகளைச் சேர்ந்த ஆறு உள்ளூராட்சி எழுதுநர்கள் வடக்கு கிழக்கு மாகாண அமைச்சுச் செயலாளரினால் இடமாற்றம் செய்யப் பட்டுள்ளனர்.

பருத்தித்துறை பிரதேச சபையைச் சேர்ந்த என்.செவ்வேள் பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கும், கரவெட்டிப் பிரதேச சபையைச் சேர்ந்த என்.ஜெயவசீகரன், கே.பாக்கியலிங்கம் ஆகியோர் யாழ்.வலயக் கல்வி அலுவலகத் திற்கும்,வலி.தெற்கு பிரதேச சபையைச் சேர்ந்த கே.யோகேஸ்வரி, என்.யோகராணி வலி.கிழக்குப் பிரதேச சபையைச் சேர்ந்த ஏ.அருந்தவ ராசா ஆகியோர் யாழ்.பிராந்திய மாவட்ட சுகாதார அலுவலகத்திற் கும் இடமாற்றம் செய்யப்பட்டுள் ளனர்.

பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி அலுவலகத்தைச் சேர்ந்த பி.ஆனந்தகுமார் பருத்தித்துறை பிரதேச சபைக்கும் யாழ்.பிராந்திய சுகாதார அலுவலகத்தில் இருந்து திருமதி ரி.சந்திரசேகரம்,திருமதி ஏ.பிரதீபன் ஆகியோர் வலி.தெற்கு பிரதேச சபைக்கும்,

யாழ்.பிராந்திய மாவட்ட சுகாதார அலுவலகத்தில் இருந்து திருமதி கே.விசாகப்பெருமாள் வலி.கிழக்குப் பிரதேச சபைக்கும் யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் இருந்து ஐ.நாகராஜாவும்,வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் இருந்து திருமதி பி.செல்வராசாவும் கரவெட்டிப் பிரதேச சபைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விடமாற்றங்கள் ஏப்பிரல் மாதம் முதலாம் திகதியில் இருந்து இந் நியமனங்கள் நடை முறைக்கு வரவுள்ளன. (உ-52)

# அடக்கு முறை ஆட்சியினால் தீவக மக்கள் பின்தங்கியுள்ளனர்

## துணைப் பொறுப்பாளர் உரை

(நெடுந்தீவு)

நாட்டில் சமாதானச் சூழல் ஏற்பட எமது இனத்தின் ஒப்பற்ற பலமே காரணம் என்று விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் செம்மணன் தெரிவித்துள்ளார்.

வேலணையில் இடம் பெற்ற கணனி மையத் திறப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட துணை அரசியல் பொறுப் பாளர் அங்கு மேலும் பேசுகையில்,

சிங்கள இனம் தமிழ் இனம் மீது கொண்ட அன்பினால் இந்தச் சமா தானச் சூழல் ஏற்படவில்லை.எமது இனத்தின் ஒப்பற்ற பலமும் தியாக முமே சமாதானச் சூழல் ஏற்படக் காரணம்.

பத்து ஆண்டுகளுக்கு மேலாக ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பொருளாதார ரீதியாகவும்,அறிவு ரீதியாகவும் தீவக மக்களை அடக்கு முறையின் கீழ் ஆட்சி செய்தனர்.

இதனால் இம் மக்கள் ஏனைய இடங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றனர்.

மக்களனைவரும் ஓரணியில் திரண்டு எமது மண்ணின் விடுதலை யை முன்னெடுக்க வேண்டும். அதுவே எமது மாவீரர்களின் கனவு. மாவீரர்களின் கனவை நனவாக்க நாம் ஓர் அணியில் திரள்வோம் என்று செம்மணன் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கணனி மையத் திறப்பு விழா நிகழ்வு கணனி மையப் பொறுப்பாளர் குகன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் எஸ்.கஜேந்திரன்,யாழ்.மாவட்டபரப் புரைப் பொறுப்பாளர் நிஷாந்தன், வேலணைப் பிரதேச செயலர் எஸ்.இரத்தினம்,தீவக மக்கள் நலன் காப்பகத் தலைவர் கனகலிங்கம், வேலணை மத்திய கல்லூரி அதிபர் அருணகிரி ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-126)

# குருபூசை

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி இந்து மன்றத்தினரால் நடத் தப்பட்டு வருகின்ற 63 நாயன்மார் குருபூசை வரிசையில் நாளை வியா ழக்கிழமை எறிபத்த நாயனார் குருபூசை இடம் பெறவுள்ளது.

கல்லூரியில் உள்ள சோமாஸ் கந்தர் ஆலயத்தில் இடம் பெறும் விஷேட பூசையைத் தொடர்ந்து ஆன் மீக உரை இடம்பெறும். (த)

# தூக்கு மேடைக்கு மீண்டும் வேலை

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் உள்ள தூக்குத் தண்டனை உபகரணங்கள் மற்றும் அறைகளைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் மரண தண்டனை வழங்கும் சட்டத்தை மீண்டும் அமு லுக்குக் கொண்டு வருவதை அர சாங்கம் தீர்மானித்துள்ளதையடுத்தே மேற்படிப் பணிகள் இடம் பெற்று வருகின்றன.இந்த வகையில் தூக்குக் கையிற்றை புதுப்பிக்கும் பணிகளிலும் சிறைச்சாலைத் திணைக்களம் கவனம் செலுத்தி வருகிறது.

இதேவேளை, கொழும்பு வெலிக கடை சிறைச்சாலை 1976ஆம் ஆண்டு ஜுலை மாதம் கைதி ஒருவருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டதையடுத்து இதுவரை காலமும் தூக்கு மேடையும் தூக்குக்கயிறும் உபயோகிக்கப் படுத்தப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.(உ-3)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு பல்கலைக் கழக இலங்கை குடித் தொகைச் சங்கம் நடத்தும் அதிதி விரிவுரை நாளை வியாழக்கிழமை பி.ப.2மணிக்கு யாழ்.பல்கலைக் கழக புவியியற் துறை மண்டபத்தில் நடைபெறவுள் ளது.

யாழ்.பல்கலைக்கழகபுவியியற் துறைத் தலைவர் பேராசிரியர் கா.குகபாலன் தலைமையில் நடை பெறும். இந்நிகழ்வில் யாழ். பல் கலை கழக துணை வேந்தர் பேராசி ரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ''வடக்குக் கிழக்கு மாகாணங்களில் குடித்தொகையைத் தீர்மானித்தல்'' எனும் தலைப்பில் கருத்துரையை வழங்குவர்.ஆவலர்களை நிகழ்வில் பங்கு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள் ளது. (த)

# உரும்பிராய்க்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்க் கூட்டமைப்பு பாராளு மன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் நேற்று உரும்பிராய்ப் பகுதிக்கு விஜயம் செய்து அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடி அவர் களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டார். (இ)

# கேள்வி கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு 2 ஆயிரத்து இருநூறு மெற்றிக் தொன் வெள்ளைச் சீனி விநியோகம் செய்வதற்கு புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் மீள்குடியமர்த்துகை அமைச்சு மூலம் கேள்விகள் கோரப்படுகின்றன. இக் கேள்வி க ளுக்கு விண்ணப்பிக்க விரும்பு பவர்கள் யாழ்.மாவட்ட செய லக புனர்வாழ்வுப் பிரிவில் இதற்கான படிவங்களையும் ஏனைய தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்.அரச அதிபர் செ.பத்மநா தன் அறிவித்துள்ளார். (த)

# மெய்வல்லுநர் போட்டிகள்

புங்குடுதீவு மகா வித்தி யாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை காலை 10.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் தர்மகுணசிங்கம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பாடசாலையின் பழைய மாணவரும், சட்டத் தரணியுமான மா.தியாகராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

---

நாயன்மார்கட்டு மகேஸ் வரி வித்தியாசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலைக்கு அருகாமையில் உள்ள மைதானத் தில் நடைபெறவுள்ளது. அதிபர் சிவபாத சுந்தரம் தலைமையில் நடை பெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். மாநகராட்சி மன்ற சிரேஷ்ட பொதுச்சுகாதாரப் பரிசோதகர் துரையப்பா மகாதேவன் பிரதம விருந்திராகவும், அரியாலை கிராம அலுவலர் தி.தருமச் சந்திரன் சிறப்பு விருந்தி னராகவும் கலந்து கொள்ள வுள்ளனர். (த-5)

## சர்வதேச...

இக்குழுவினர் சு.ப.தமிழ்ச் செல்வனு டன் பேச்சுவார்த்தை நடத்தினர்.இப் பேச்சுக்களின் போது உலக வங்கி யின் இலங்கைக்கான இயக்குநர் பீற்றர் கரோல்ட்,ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான இயக்குநர் ஜோன்பூனி,யூ.என்டீபி யின் இலங்கைக்கான இயக்குநர் மைக் கல்போமியோ,யப்பானில் நடை பெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் திட்டங்களைத் தீட்டும் குழுவின் தலைவர் ஸ்ரோறோஸ் ஆகியோரும்,

விடுதலைப் புலிகளின் சார்பில் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலணி பணிப்பாளர் நாயகம் புலித்தேவன், ரான் செயலகப்பணிப்பாளர் கெல் வின் ஆகியோரும் கலந்து கொண் டனர்.

சுமார் 3 மணித்தியாலங்களாக நடை பெற்ற இப்பேச்சுவார்த்தை களின்போது வடக்குக் கிழக்கு மக்களின் புனர்வாழ்வு தொடர்பான முக்கிய விடயங்கள் பற்றியும் கலந் துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. - (வ)

## முல்லைத்...

எண்ணிக்கை அதிகரித்து காணப் படுவதால் மீன்பிடித் தொழிலுக்கு செல்லும் கடற் தொழிலாளர்கள் அச்சம் காரணமாக தமது மீன்பிடி வள்ளங்களையும், மற்றும் மீன்பிடி உபகரணங்களையும் கடலில் விட்டுவிட்டு உயிர் தப்பினால் போதும் என்று தப்பி கரைசேர்ந்துள் ளதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

இது இவ்வாறு இருக்க முல்லைத்தீவுக் கடலில் கடற்புலிகள் பயிற்சி நடவடிக் கையில் ஈடுபட்டு வருவதாக கடற்படையினர் தெரிவித் துள்ளனர். ரோந்து நடவடிக் க்கையில் ஈடுபட்டுள்ள கடற்படையினர் விடுதலைப் புலிகளின் பயிற்சியாளர் களை கடற்பிராந்தியத்தில் கண்டதாகவும் தெரிவித் துள்ளனர். (வ)

## சிங்கள....

வடபகுதியில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த சிங்கள- முஸ்லிம் மக்களை விடுதலைப்புலிகள் திட்டமிட்டு விரட்டியுள்ளனர்.

இதனைத் தடுக்க பாதுகாப்பு அமைச்சு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிவித்த நிமால் ஸ்ரீபால டிசில்வா தேர்தலுக்கு முன்னரே அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எவ்வாறு இரகசிய உடன்படிக்கை ஏற்பட்ட தென்றும் கேள்வி எழுப்பினார். (இ-10)

## புலி உறுப்பினர்...

தெரிவிக்கப்படுகிறது. சிறுவர்கள் இருவரும் நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் சிறுவர்களை பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு நீதிபதி மொகைதீன் உத்தர விட்டுள்ளார்.

எனினும் சிறுவர்களை பொறுப்பேற்பதற்கு எவரும் முன் வராததை அடுத்து சிறுவர்கள் இருவரையும் நாளை வரை சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பில் வைக்குமாறு நீதி பதி உத்தரவிட்டார். (த)

## கொழும்பில்...

பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படும் அபாயம் உள்ளது என அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மஜிஸ்ரேட் நீதிமன்றில் சரணடையும் இவரை வெலிக்கடைச்சிறைச் சாலையில் தடுத்து வைப்பதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. (த)

## யாழ்.குடா...

பறக்க விடுமாறும் கேட்கப்பட்டுள் ளனர்.

மானிப்பாய், நெடுந்தீவுக் கடற்பரப்பு, கிளாலி, மட்டக் களப்பு, மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் இடம்பெற்றது போன்று சமாதானத்திற்கும், புரிந்துணர்வு உடன்பாட்டிற்கும் எதிரான நடவடிக்கைகைகள் இனிமேல் ஏற்படக் கூடாதென்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இக்கறுப்புப்பட்டிப் போராட்டம் வடக்குக்-கிழக்கு எங்கும் நடைபெறவுள்ளது. (இ-4,51)

# பத்திரிகையாளர் மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மனித நேய அமைப்புக் களின் பத்திரிகையாளர் மாநாடு இன்று பிற்பகல் 2மணிக்கு இணைய அலுவலகத்தில் நடை பெறும். (ந)

**அன்பு மாணவர்களே!**

05.02.2003அன்று வெளியான புலமைப்பரீட்சை வினாக்களுக் கான விடைகளும்,அதில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங் களும் நாளைய வலம்புரியில் வெளிவரும்.

கல்விப்பகுதி.


# தேவை

த. குமாரசாமி அன் சன்ஸ் ஸ்தாபனத்திற்கு கண்ணாடி வகைகளை வெட்டி விற்பனை செய்யும் ஊழியர்கள் உடன் தேவை. அனுபவமுடையோரும் பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது.

வயதெல்லை:- 18 - 28 வரை காரியாலய நேரத்தில் நேரில் வரவும்.

தொடர்பு:~ 248/1, K.K.S. ROAD JAFFNA

(6551)

# சிறு விளம்பரம்

வகுப்புக்கள்

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக் கப்பயில, இலக்கணம், கடிதம்,வினாவிடை மற்றும், ஆண்டு 1ல் இருந்து O/L வரை சகல பாடங்களும்

தொடர்பு:-

விக்கினேஸ்வரன் ஆச்சாரி

426(302) K.K.S வீதி,

யாழ்ப்பாணம். (6553)

# கண்ணீர் அஞ்சலி



மண்ணில்

10 - 04 -1992

விண்ணில

16-02-2003

ரஜீந்திரன் ஸாரங்கி

திரு.திருமதி ரஜீந்திரன் வாஸஸ்பதி தம்பதிகளின் அருமைப்புதல்வி ரஜீந்திரன் ஸாரங்கி அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையும், அதிர்ச்சியும் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள் கின்றோம்.

தீவகவலய உதவிக்கல்விப் பணிப்பாளர் (அழகியல்)

தீவகவலய இசை ஆசிரியர்கள்

# காணிவிற்பனைக்கு

காரைநகர் நக்கிலியவத்தை நெல் வயல் 50 பரப்பு விற்பனைக்குண்டு

தொடர்பு கொள்ளவும்:- S.T.K. கிருபானந்தன் 359/19 கோயில் வீதி, நல்லூர்.

(C/5784)


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.02.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.